PUBLIC LIBRARY
JAFFNA.

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 137
இதழ் : 12
பக்கங்கள் : 08
திகதி : 06.07.2014
விலை : 15.00

# போரினால் சிதைவுண்ட வடபகுதிக்கு வாருங்கள்!

## திருத்தந்தையிடம் யாழ் மறைமாவட்டப் பொதுநிலையினர் கழகம் வேண்டுகோள்


திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருகின்ற தை மாதம் இலங்கை வரத் திட்டமிட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. அவரது வருகையின் போது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கவும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி அரசாங்கத்தை உந்தவும் வடபகுதிக்கு விஜயம் செய்ய வேண்டுமென யாழ் மறைமாவட்டப் பொது நிலையினா கழகம் திருத்தந்தைக்கு வரைந்துள்ள மடலில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் தமது மடலில் சர்வதேச சமூகத்தின் இடையறாத அழுத்தங்களின் பின்பும் இலங்கை அரசாங்கமானது நீதி வழங்குவதிலும் நிரந்தரத் தீர்வைக் காண்பதிலும் ஆர்வமின்றி இருப்பதைச் சுட்டிக்காட்டும் பொது நிலையினா் கழகம் திருத்தந்தையின் வருகையும், ஆசீரும், அவர் வழங்கும் செய்தியும் எமக்கு நன்மையைப் பெற்றுத் தரும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## நாரந்தனைப் பங்கின் 'கல்வி எழுச்சி வாரம்"

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் ஆதரவுடன் நாரந்தனைப் பங்குத்தந்தை அருட்பணி. பீற்றர் தலைமையில் நாரந்தனைப் பங்கிற்கான கல்வி எழுச்சி வாரமானது கடந்த 08.06.2014 தொடக்கம் 14.06.2014 வரை ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் முதற்கட்டமாக கல்வி எழுச்சி சம்பந்தமான இடங்களில் நாடக ஆற்றுகை இடம் பெற்றது. மேலும் அவ்வாரம் முழுவதும் கல்வியை முக்கியவத்துவப் படுத்தி இல்லத் தரிசிப்புக்களும் துண்டுப்பிரசுரம் வழங்கலும் இடம்பெற்றது. அடுத்து 08.06.2014 காலை 9.00 மணிமுதல் மதியம் 2.00 மணிவரை மாணவ மாணவியருக்கான சிறப்புக் கருத்தரங்கு யாழ் கல்வி ஒரு சமூகத்தில் செல்வாக்கு செலுத்தும் விதம் என்பன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடப் பட்டது. அதைத் தொடர்ந்து கல்வி சம்பந்தமான சுலோகங்கள் மாணவர்களால் எழுதப்பட்டன. அத்தோடு கல்வி விழிப்புணர்வுக் கொடி வாரம் அனுசரிக்கப்பட்டது. மாணவர்களால் எழுதப்பட்ட சுலோகங்கள், வரையப்





வீதி நாடகம் நாரந்தனைப் பங்கு இளையோர்களுக்குப் பயிற்றுவிக்கப் பட்டது. அதை தொடர்ந்து அந்த வாரம் முழுவதும் அந்த பங்கை சேர்ந்த பல மறைமாவட்ட இளம் வளவாளர்களால் நிகழ்த்தப்பட்டது. இதில் கல்வியின் முக்கியத்துவம் கல்வி கற்பதற்கான தடைகள் மற்றும் பட்ட படங்கள் அனைத்தும் நாரந்தனை ஆலய சூழலிலும், மக்கள் அதிகமாகக் காணப்படும் இடங்களில் மரங்கள், சுவர்களில் ஒட்டப்பட்டன.

அதைத் தொடர்ந்து 08.06.2014 அன்று மாலை 3.00 மணிக்கு பெற்றோருக்கான கருத்தரங்கு யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி ம.வி.இ. ரவிச் சந்திரன் அவர்களால் நிகழ்த்தப் பட்டது. இதில் பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு பிள்ளைகள் சீராகக் கல்வி கற்க ஏற்ற சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பது சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்தோடு மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் அனைத்தும் பெற்றோருக்கு விளக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த வாரம் முழுவதும் மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகள் பிரிவு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

இறுதியாக 14.06.2014 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கல்வி எழுச்சிப் பேரணி நாரந்தனை பங்கில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் தங்களால் எழுதப் பட்ட சுலோகங்களையும், பதாதைகளையும் தாங்கியவாறு கோஷங்கள் எழுப்பிப் பேரணியில் கலந்து கொண்டனா். இறுதியாக நாரந்தனை இளையோரின் கல்வி எனும் வீதி நாடகமும் அதைத் தொடர்ந்து யாழ் மறை மாவட்ட இளையோரின் "குடும்பம் எனும் வடிவில்" எனும் வீதி நாடகமும் அதைத் தொடர்ந்து இறுதியில் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெற்று கல்வி எழுச்சி வாரம நிறைவுக்கு வந்தது.

கற்பாம் - உயர்வோம் - வாழ்வோம்.

## இறையழைத்தல் என்பது ஒரு தற்காலிகமான ஒப்பந்தம் அல்ல - திருத்தந்தை பிரான்சிஸ் -

மரியன்னை மீது பற்றில்லை என்று சொல்லும் கிறிஸ்தவர்களைக் காணும்போது எனக்கு வருத்தமாக உள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

தங்களுக்கு இறையழைத்தல் உள்ளதா என்பதைத் தேடிவரும் உரோம் மறை மாவட்டத்தைச் சேர்ந்த இளையோர் பலரை கடந்த வார இறுதியில் வத்திக்கான் தோட்டத்தில் அமைந்துள்ள அன்னை மரியா கெபியில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்தவ வாழ்வில் அன்னை மரியா வகிக்கும் மிக முக்கிய பங்கைக் குறித்துப் பேசினார்.

அன்னை மரியாவிடம் பக்தி கொண்டிருப்பது வெறும் மேலோட்டமான பக்தி உணர்வு மட்டுமல்ல, மாறாக, அன்னை மரியாவையும், அன்னை திருஅவையையும் அன்பு கூர்வது உண்மையான இறையியல் கருத்து என்று திருத்தந்தை இளையோரிடம் எடுத்துரைத்தார்

மேலும், இறையழைத்தல் என்பது ஒரு தற்காலிகமான ஒப்பந்தம் அல்ல, மாறாக, ஒருவரது வாழ்வு முழுவதும் மேற்கொள்ளவேண்டிய ஓர் உறவு என்பதையும் திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்.

இறையழைத்தலாக இருந்தாலும் சரி, திருமண உறவாக இருந்தாலும் சரி, இன்றைய சூழலில் தற்காலிகம் என்ற எண்ணம் மிக அதிகமாக நியாயப்படுத்தப்படுகிறது என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இத்தகைய எண்ணத்திலிருந்து இளையோர் விடுபட்டு, நிரந்தர உறவுகளை வளர்க்கும் பக்குவம் பெறவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.


## இளையோருக்கான எழுத்தாளர் பயிற்சி



யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான எழுத்தாளர் பயிற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன இதன் முதற்கட்ட பயிற்சிகளைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் பயிற்சிகள் இடம்பெற்றன. அவை 07.06.2014 அன்று அதிபர் ஞா. கெனத் மேரியன் அவர்களால் கவிதை ஆக்கம் சம்பந்தமான பயிற்சியும் 12.06.2014 அன்று விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாஸ் அவர்களால் கட்டுரை ஆக்கம் சம்பந்தமான பயிற்சியும் வழங்கப்பட்டது. தொடர்ந்து 27.06.2014 அன்று அதிபர் ஞா. கெனத் மேரியன் அவர்களால் கவிதை உருவாக்கம் சம்பந்தமான இரண்டாம் கட்டப் பயிற்சியும் இடம்பெற்றது. பயிற்சிகளின் நிறைவில் சான்றிதழ் வழங்க இருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் தொடர்ந்து இடம்பெறும் பயிற்சிகளில் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :- 0212221239

## யூலைப் பெருமகனே வாழ்க!



யூலை மாதம் தங்களின் திருநாள்
புனித தோமையார் தினமது கொள்ளும்
தாங்கள் உதித்த இத்திங்களில் தானே
யாழின் ஆயராய் மகுடமும் சூடினீர்

வானுறு மதியை ஒத்ததுங்கள் வதனம்
தேனுறு மலரை போன்றதுங்கள் கருணை
அலையுறு கடலை நிகர்த்ததுங்கள் சேவை
உயருறு மலையை சேர்ந்ததுங்கள் துடிப்பு

ஆன்மீக வாழ்வின் அருளுருவே
ஆயனாய் வழிகாட்டும் பெருங்குருவே
நீதியை நிலைநிறுத்தும் நேருருவே
தமிழ் நெஞ்சங்களின் திருவுருவே

கலாபனைகள் நிறைந்த காலமதில்
கதிரவன் ஒளியென வியாபகம் பெற்று
பவளம் கடந்தும் ஓயாது பணி புரியும்
பரிபூரணனே பார்புகழ வாழியவே!

## புனித தோமையாரின் பெயர் கொண்ட ஆயர் தினம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் முக்கிய தினங்கள் அனைத்தும் யூலை மாதத்திலேயே அமைகின்றன.

யூலை மாதம் 3ம் திகதி புனித தோமையார் பெயர் கொண்ட தினத்தையும் யூலை 6ம் திகதி யாழ் ஆயராக நியமனம் பெற்ற தினத்தையும் 13ம் திகதி பிறந்த தினத்தையும் 30ஆம் திகதி ஆயராக அபிஷேகம் செய்யப்பட்ட தினத்தையும் யாழ் ஆயர் கொண்டாடி மகிழ்கின்றார். இவை அனைத்தையும் ஒரு முகப்படுத்தியே ஆயர் தினம் கொண்டாடப் பட்டு வருகின்றது.

யூலை 3ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியை யாழ். மறைக்கல்வி நடுநிலையம் ஒழுங்குசெய்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமது ஏண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# கத்திக்குத்தும் வாள்வெட்டும் தமிழர் பண்பாடா?

யாழ் மாவட்டத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சமூக சீரழிவுகள் மனவேதனையைத் தருகின்றன. இவ்வாரம் பத்திரிகையில் தந்தை மகளை வாளால் வெட்டிய செய்தி படித்து வேதனை அடைந்தேன். வடக்கில் வாள்களை வீடுகளில் வைத்திருப்பதும் அதை உற்பத்தி செய்வதும் தண்டணைக்குரிய குற்றமென பொலிஸார் அறிவித்த செய்தியும் அப்பத்திரிகையில் காணப்பட்டது. வாள்வெட்டு கத்திக்குத்து இரட்டைக் கொலை, முக்கொலை அடிதடி கோஷ்டி மோதல் ஆவா குழு என்று மிகவும் கீழ்த்தரமான செயற்பாடுகளில் எம் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தில் -இப்படியும் சீரழிவா என்று பலர் ஏங்குகின்றனர் வெட்கப்படுகின்றனர்.

ஒரு காலத்தில் வேறு மாவட்டங்களுக்கு முன் உதாரணமாக இருந்த யாழ்ப்பாணத்தில் தற்போது ஏன் இந்த நிலை என்று நினைத்து எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்த ஒழுக்கம் தற்போது இல்லை. தேசிய உணர்வுக்கு முக்கியமளித்து தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகள் அபிலாஷைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என அப்போது சகலரும் எண்ணியிருந்த காலம். எரிபொருட்கள் இன்றி, போதிய உணவுகள் இன்றி அதாவது உரிய வசதி வாய்ப்புகள் எதுவுமே இல்லாத ஒரு கால கட்டத்தில் யுத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சிறந்த கல்விப்பெறுபேறுகளைக் காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள இளைஞர்களை காணமுடிந்தது, பண்பான சமூகத்தைக் காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள பெற்றோரைக் காணமுடிந்தது. ஆனால் இன்று அவற்றுக்கு என்ன நடந்தது? நவீன மாற்றங்கள் நவீன தொழில் நுட்ப சாதனங்கள் கொழும்பிலும் வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அவற்றின் நற்மகூடத் தெரியாது இருப்பதை வைத்துக் கல்வி கற்றுச் சித்தியடைந்தார்கள். முன்னேறினார்கள் முழு உலகமே வியந்தது. இத்தனை நெருக்குவாரங்கள், ஒடுக்கு முறைக்கு மத்தியில் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம், பொறுமை மற்றயவர்களுக்கு உதாரணமாக விளங்கியது. ஆனால் இன்று தினமும் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும்போது இதுதானா தமிழர்களின் பண்பாடு என்று எண்ணத் தோன்றுகின்றது. யுத்தம் முடிவடைந்து விட்டது என்றும் யுத்தத்தின் பின்னரான கால கட்டம் என்றும் பலர் கூறுகின்றனர். சர்வதேச நாடுகள் கூட யுத்தத்தின் பின்னரான காலகட்டம் எனக் கூறுகின்றன. அதாவது இந்தக் காலப்பகுதியில் நிரந்தர அரசியல் தீர்வு, யுத்தம் இடம் பெற்ற பிரதேசங்களில் அபிவிருத்தி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் அவ்வாறு இல்லை. ஆயுதத்தைக் கையாண்ட யுத்தம் அழிக்கப்பட்டு விட்டது அதன் பின்னரான காலகட்டம் என்பது வேறு வகையாக யுத்தம் ஒன்றை திணித்துள்ளது. பண்பாடு, நாகரீகம், ஒழுக்கம் ஆகிய மரபுசார்ந்த சமூகக் கட்டுப்பாடுகள் கட்டவிழ்க்கப்பட்டு அவை தலைவிரித்தாடுகின்றன. நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வருகைதான் இதற்குக் காரணம என்று கூறமுடியாது. நவீன தொழில் நுட்ப சாதனங்கள் என்பது உலகம் முழுவதிலும் உண்டு. யுத்தத்தின் பின்னரான கால கட்டத்தில் இவை யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் வாள்வெட்டும், கத்திக்குத்தும், அடிதடியும், பெண்களை இழுத்துக் கொண்டு ஓடுகின்ற ஒழக்கமற்ற செயற்பாடுகளும் நவீனதொழில் நுட்ப சாதனங்களின் வருகையினால் இணையத்தள பாவனைகளினால் வந்தது என்று கூற முடியாது. மாறிவரும் உலகில் அவ்வாறான தொழில்நுட்ப சாதனங்கள் தமிழ்ச் சமூகத்துக்குத் தேவை. குறிப்பாக இளைஞர்களுக்கு அது அவசியம்.

ஆனால் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டியது எமது பொறுப்பு. ஒரு சமூகத்தின் நில உரிமைகளை, அழிப்பதற்கும் அந்த சமூகத்தின் அரசியல் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை குறைப்பதற்கும் அந்த சமூகத்தின் பண்பாட்டுத் தளத்தை சீரழித்தால் போதும். அந்த அடிப்படையில் தான் யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சம்பவங்களை நோக்க வேண்டியுள்ளது. ஆகவே உணர்ந்து செயற்பட வேணடும். விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியது பெரியவர்களின் பொறுப்பு.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# துவக்ககாலத்தைவிடத் தற்போது கிறிஸ்தவ மறைசாட்சிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது

கிறிஸ்தவத்தின் துவக்ககாலத்தை விட தற்போது கிறிஸ்தவ மறைசாட்சிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக கடந்த வாரம் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்ல சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியின்போது, கிறிஸ்தவ சிறு செடியாக இருந்தபோது மறைசாட்சிகளின் இரத்தமே அதனை வளர வைத்தது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தற்போதும் பெரும் எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாக உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.

இயேசுவின் வார்த்தை இறையரசாக வளர்ந்து செழிப்பதற்கு, தூய ஆவியின் பலமும் கிறிஸ்தவர்களின் சாட்சியமுமே முக்கிய கூறுகளாக இருந்துள்ளன எனவும் கூறினார் திருத்தந்தை.

திருஅவையைக் கட்டியெழுப்புபவரும், வளர்ப்பவரும் திருஅவை சமூகத்தைக் கூட்டுபவரும் தூய ஆவியானவராக இருக்க, திருஅவை வளர்வதற்கு கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வும் இன்றியமையாததாக இருக்கிறது எனவும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைசாட்சிகளின் இரத்தமே திருஅவை எனும் செடியைத் தண்ணீர் விட்டு வளர்த்தது என்றார்.

## திருத்தந்தை பிரான்சிஸ்

இன்றும் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக மறைசாட்சிகளாக உயிரை விடுவதும், சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்படுவதும் தொடர்கிறது எனவும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மத்தியக்கிழக்குப்பகுதி நாடுகள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளன எனவும் குறிப்பிட்டார்.

# ஆயர்கள் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, ஏனெனில் அடைக்கலமாக இயேசு உள்ளார்

புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல் திருவிழாவான கடந்த ஞாயிறன்று உலகின் 24 புதிய பேராயர்களுக்கு 'பாலியம்' எனப்படும் கழுத்துப் பட்டையை வழங்கிய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆயர்கள் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, ஏனெனில் அடைக்கலமாக இயேசு உள்ளார் என்பது குறித்து எடுத்துரைத்தார்.

கடவுள் நம்மீது கொண்டிருக்கும் அன்பின் உறுதிப்பாடு உலகின் எல்லா அச்சங்களையும் வெற்றிகொள்ளக் கூடியது, மற்றும் கடவுள் மீது நாம் கொள்ளும் நம்பிக்கை, உலக அச்சங்களை மேற்கொள்ள உதவுகிறது என்று பேராயர்களிடம் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வுலகின் அச்சங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் பாதுகாப்பு, இவ்வுலகம் தருவதல்ல, மாறாக இயேசுவின் அடைக்கலத்திலிருந்து கிட்டுவது எனவும் கூறினார்.

## திருத்தந்தை பிரான்சிஸ்

இயேசுவை மறுதலித்து, பின் தன் தவறை உணர்ந்து, தன் பலவீனத்தை ஏற்றுக்கொண்ட புனித பேதுரு, இயேசுவிடம் தன்னை முற்றிலுமாக கையளித்ததைப் பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை, 'என்னைப்பின் செல்' என, தான் உயிர்த்த பின்னர், இயேசு பேதுருவிடம், கூறிய இவ்வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் கூறப்படும் வார்த்தைகள் என்றார்.

வீணான விடயங்களில் நேரத்தைச் செல்விடாமல், எதிர்வரும் இடர்பாடுகளைக் குறித்துக் கவலைப்படாமல் நற்செய்தி அறிவிப்பதிலேயே முழுக்கவனம் உடையவர்களாக, இயேசுவைப் பின்செல்பவர்களாக, ஒவ்வோர் ஆயரும் இருக்கவேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்

# ஆசிய இளையோர் தினத்தில் திருத்தந்தை கலந்துகொள்வது, அருள் நிறைந்த தருணமாக அமையும்

தென் கொரியாவின் டெஜோனில் வருகிற ஆகஸ்ட் 10 முதல் 17 வரை நடக்கவிருக்கும் ஆசிய இளையோர் நாள் கொண்டாட்டங்களில் திருத்தந்தை பிரான்சிஸ். அவர்கள் கலந்துகொள்விருப்பது, நிச்சயமாக அருள் மற்றும் மகிழ்வு நிறைந்த தருணமாக அமையும் என்று ஆசிய ஆயர்கள் கூறியுள்ளனர்.

ஆசிய இளையோர் நாள் கொண்டாட்டங்களில் திருத்தந்தை ஒருவர் கலந்துகொள்வது இதுவே முதல் முறை என்றுரைத்த, ஆசிய ஆயர்கள் பேரவை கூட்டமைப்பின் இளையோர் பணிக்குழுத் தலைவர் ஆயர் ஜோயெல் பைலோன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆகஸ்ட் 15ம் திகதி இளையோரைச் சந்திப்பார் மற்றும் ஆகஸ்ட் 17ம் திகதியன்று அவர்களுக்கு விழாத் திருப்பலி நிகழ்த்துவார் என்று தெரிவித்தார்.

## ஆசிய ஆயர்கள்

ஆசிய இளையோர் நாள் கொண்டாட்டங்களில் நேரிடையாகப் பங்கு கொள்ள இயலாவிட்டாலும், அந்நாள்களின் அருள்வரங்களைப் பெறுவதற்கு அச்சமயத்தில் மனதால் ஒன்றித்து, திருத்தந்தை வழங்கும் செய்தியை, பிள்ளைகளுக்குரிய பக்தியோடு செவிமடுத்தால் போதுமானது என்று பிலிப்பின்ஸ் ஆயர் பைலோன் பீதெஸ் செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

இளையோரோ, முதியோரோ, யாராக இருந்தாலும் உண்மையின் நற்செய்தியை அறிவித்து இறையன்புக்குச் சாட்சிகளாய் வாழ்வதற்கு நற்செய்தியின் மறைப்பணியாளர்களாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும் ஆயர் கூறியுள்ளார்.

# செப் 28; அக்டோபர் நடைபெறும் குடும்பம் பற்றிய ஆயர் மாமன்றத்துக்காகச் செபிக்கும் நாள்

வருகிற அக்டோபர் 5 முதல் 19 வரை குடும்பம் பற்றிய 3வது சிறப்பு ஆயர் மாமன்றம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும்வேளை, இம்மாமன்றம் சிறப்புற அமைவதற்கென, வருகிற செப்டம்பர் 28ம் திகதியன்று சிறப்பாக செபிக்குமாறு உலகக் கத்தோலிக்கருக்கு அழைப்பு விடுத்துள்ளது வத்திக்கான்.

குடும்பம் பற்றிய சிறப்பு ஆயர் மாமன்றத்திற்கான முன்வரைவுத் தொகுப்பைக் கடந்த வாரம் பத்திரிகையாளர் கூட்டத்தில் வெளியிட்ட வத்திக்கான் அதிகாரிகள் இச் செப நாளை அறிவித்தனர்.

இந்தத் தொகுப்பை, உலக ஆயர் மாமன்றப் பொதுச் செயலர் கர்தினால் லொரென்சோ பால்திச்சேரி அவர்கள் தலைமையிலான குழு ஆறு ஐரோப்பிய மொழிகளில் வெளியிட்டது.

"குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவிப்பதிலுள்ள மேய்ப்புப்பணிச் சவால்கள்" என்ற தலைப்பில் 3வது சிறப்பு ஆயர் மாமன்றம் நடைபெறும்.

மேலும், "இயேசு கிறிஸ்தவ குடும்பத்தின் அழைப்பையும் அதன் பொருளையும் வெளிப்படுத்துகிறார்" என்ற தலைப்பில், 2015ம் ஆண்டில் குடும்பம் பற்றிய உலக ஆயர் மாமன்றம் நடக்கும் எனவும் கர்தினால் பால்திச்சேரி அறிவித்தார்.

குடும்பம் மற்றும் திருமணம் குறித்து உலகின் தலத் திருஅவைகளுக்கு அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு வந்த பதில்களின் அடிப்படையில் இந்த முன்வரைவுத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகத்தின் அடிப்படை அமைப்பாக இருக்கின்ற குடுமபம் இக்காலத்தில் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொள்கின்றது என்றும், இவற்றுக்குத் திருஅவை உதவும் வழிகள் குறித்து ஆராயப்படும் என்றும் பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறப்பட்டது.

# புனித சவேரியாரின் திருப்பண்டங்களை ஒம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பார்வையிடுவார்கள்

2014ம் ஆண்டு நவம்பர் 22ம் திகதி முதல் 2015ம் ஆண்டு ஜனவரி 4ம் திகதி வரை கோவாவில் புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருப்பண்டங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலுமிருந்து ஐம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் அத்திருப்பண்டங்களைப் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக, இந்நிகழ்வின் தலைமை நிர்வாகி அருட்பணி ஆல்பிரட் வாஸ் தெரிவித்தார்.

1506ம் ஆண்டு ஏப்ரல் 7ம் திகதி இஸ்பெயினில் பிறந்த புனித பிரான்சிஸ் சவேரியார், இந்தியாவின் கோவாவுக்கு 1542ம் ஆண்டு மே 6ம் திகதி வந்தார். பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆசியாவில் மறைப்பணியாற்றிய இப்புனிதர் சீனாவின் சான்சியன் தீவில் 1552ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி இறந்தார்.

இப்புனிதரின் உடல் போர்த்துக்கீசிய காலனியாகிய மலாக்காவில் முதலில் வைக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகள் கழித்து கோவாவின் குழந்தை இயேசு பசிலிக்காவில் வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக் கண்ட ஆயரே! வருக! ஆசீர் தருக!

1938ம் ஆண்டு காவலூரில் பிறந்த யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை அவர்கள் இளமையிலேயே இறை பக்தியும், ஒழுக்கசீலமும், அமைதிப் போக்கும்கொண்டு விளங்கினார். புனித அந்தோனியார் ஆலய சமூகத்தின் முதற் குருவாகத் தோன்றிய அருட்திரு விக்ரத் இராசநாயம் அவர்களின் அர்ப்பணிப்புள்ள துறவற சேவையினால் கவரப்பட்டுத் தானும் குருவாக வேண்டும் என்ற ஆவலினால் துறவற வாழ்வைத் தேர்ந்து கொண்டார்.

இலங்கையின் முதற் தமிழ் கத்தோலிக்க ஆயர், மேதகு ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்களின் திருக்கரங்களினால் 1963ம் ஆண்டு மார்கழித் திங்கள் 21ம் நாள், யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். இளங்குரவர் தோமஸ் அடிகளார் தாயகத்தின் பல்வேறு பங்குத் தளங்களில் சிறப்பாகப் பங்குப் பணியும், மறை பரப்புப் பணியும் ஆற்றிவரும் வேளையில் மேற்படிப்புக்கு றோமாபுரி செல்லும் வாய்ப்புப் பெற்று ஆன்மீகத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

1981ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக புனித 2ம் அருளப்பர் சின்னப்பரால் நியமனம் செய்யப்பட்டார். ஆலய மணிகள் சங்கநாதத்துடன் ஆர்ப்பரிக்க வெடியோசை வானைப் பிளக்க, கரகோஷம் அதையும் மிஞ்ச, புனித அந்தோனியார் ஆலய முகப்பில், யாழ் ஆயர் இல்லத்தின் தூதுவர், இந்த இனிப்பான செய்தியை எமக்கறிவித்த நிகழ்வு இன்றும் எம் மனதில் நிற்கிறது. 1981 ஆடி 30இல் மருதமடுத் திருப்பதியில் ஆயராக அபிஷேகம் பெற்றார்.

1983இல் தமிழர் தாயகப் பகுதி எங்கும் போர்ச் சூழல் கருமேகம் கட்டிய ஒரு கால கட்டத்தில் இவரது ஆயர் பணி ஆரம்பமாகியது. புதிதாக

**ஆயரின் கனடா விஜயத்தின் போது வெளியான சஞ்சிகையில் இடம்பெற்ற கட்டுரை**

உருவாகிய மன்னார் மாவட்டத்தை, தனது நிர்வாகத் திறமையினால் சிறப்பாகக் கட்டி எழுப்பினார்.

1992இல் யாழ் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்ற காலந்தொட்டு, இன்றுவரை பல இன்னல்களுக்கு முகங் கொடுத்துப் பேரிடரின் மத்தியில் பெரும்பணியாற்றிவரும் ஆயரவர்கள் கடந்த மார்கழி மாதத்தில் தமது குருத்துவப் பணியின் 50 அகவையைப் பூர்த்தி செய்தார். யாழ் நகரிலும், கொழும்பு மாநகரிலும் சிறப்பான விழா எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நான்காவது முறையாகக் கனடா தேசத்திற்கு வருகை தரும் யாழ் ஆயர் அவர்களை கனடா வாழ் காவலூர் புனித




அந்தோனியார் ஆலயப் பங்கு மக்கள் சார்பாக, குருத்துவப் பொன் விழா வாழ்த்துக்கூறி, வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

சென்ற முறை கனடாவிற்கு விஜயம் செய்தபோது, இங்கு வாழும் புலம்பெயர் சிறுவர் கல்வியிற் சிறந்து, வாழ்வில் உயர்வுநிலை அடைவதைக் கண்டு பேரானந்தம் அடைந்தார். மாணவர்கள் ஆன்மீகக் கல்வி கற்று, அதில் பாண்டித்தியம் பெற்று, நல்ல குருக்களாக மாறிக், கத்தோலிக்க திருச்சபையின் இன்றைய தேவைக்குக் கை கொடுக்கவும் முன்வரவேண்டும் என்ற தனது ஆவலை வெளிப்படுத்தியிருந்தார். ஆயரின் ஆசை நிறைவேற ஆண்டவன் அருள் புரிய வேண்டுமென விரும்புகின்றோம்.

**வண்ணமடுப் பதியில்<br>கோயில் கொண்ட<br>அன்னையின் முன்<br>அபிசேஷகம் பெற்ற<br>ஆயரே உன்னாசிதனை<br>அருள்வீரே!**

# 'புல்லாங்குழல்'

சகோ. இராக்கினி SMSM



புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே' என்று கவிஞர் கண்ணதாசன் தனது பாடல் வரிகளால் பெருமைப்படுத்தியுள்ளார். புல் மென்மையானதால் மேன்மையானது. 'வால் முளைத்த மண்ணே! வசந்தத்தின் பச்சை முத்திரையே! உடல் மெலிந்த தாவரமே! உன்னைப் பனித்துளிகளின் படுக்கை அறை என்பேன்' என்று கவிஞர் காமராஜரால் புகழப்பட்ட புல்லின் வகையே மூங்கில். மூங்கில் தண்டுப் பகுதியில் கணக்கற்ற கணைகளைக் கொண்டு நீண்ட உச்சியை நோக்கிச் சிறுத்து உறுதியாய் இருக்கும் ஒரு கணுவை உருவாக்க வலிமையோடு வளரும் கணுக்கள் மூங்கிலின் வளர்ச்சிக்கு அடிபபடையானவை. அடிமரத்தின் கணுக்கள் பெரியதாகவும், வலிமையானதாகவும், மேலே போகப் போக வலுவிழந்தும் ஒரு கணுவை உருவாக்கி விட்டு அடுத்தக் கட்டத்திற்கு அடியெடுத்து வைக்கும்.

## வாழ்க்கைக்குரிய வளங்கள்

மூங்கில் மரங்கள் வறட்சியைத் தாங்கி, காற்றை எதிர்த்து நின்று சவால்களை வெல்லும். காற்று வீசினாலும், மழை பெய்தாலும் முறியாமல் வளையும் தன்மையும், வலிமையும் கொண்டதே மூங்கில்.

நமது வாழ்க்கையும் மூங்கிலைப் போன்று வளைந்து கொடுக்கும் தன்மையும், வலிமையின் உறுதியும் கொண்டது. காட்டில் இருந்த மூங்கில் ஒரு நாள் கத்தியால் வெட்டப்பட்டு நெருப்புக் கம்பி தன்னைத் துளைக்க 'ஐயோ, என் உடல் புண்ணாகிறதே' என்று கதறி அழ, 'கொஞ்சம் பொறுமையாய் இரு' என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று. ஒரு நாள் மூங்கில் புல்லாங்குழல் ஆனது!

மேடையில் உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று. அது சொன்னது 'புண்பட்டவன் பணைபட்டவனென்று.'

கால்பந்து, புல்லாங்குழல் இரண்டும் இயங்குவது காற்றினால்தான். கால்பந்து காலால உதைக்கப்படுகிறது. புல்லாங்குழல் உதடுகளில் வைத்து முத்தமிடப்படுகிறது. கால்பந்து தான் வாங்கும் காற்றை வேட்கையோடு தானே வைத்துக்கொள்கிறது. சுயநலம் மிதிபடுவதையும், பொதுநலம் போற்றப்படுவதையும எடுத்தியம்புகிறது.

மூங்கிலின் மரணமே புல்லாங்குழல், காட்டுக்குயிலின் வாய்மொழி கேட்க, நதி நங்கையின் காற்சலங் கைகள் நடனமாட பாட்டுக் குரல் இசைக்கும் பாட்டுக்குழல் தான் புல்லாங்குழல் மாடு மேய்க்கும் சிறுவனின் மந்திரக்குழல்... மனதை மயக்கும் மழலைக்குழல். கோபியர்கள் கொஞ்சும் கோகுலத்துக் கண்ணன் இதழ்களில் தவழும் இனிய குழல்.

மூங்கில் புல்லாங்குழலாக, நெருப் பின் வலிகளைத் தாங்கி சுமப்பதால் பல புகழ் பாமாலைகளை புல்லாங்குழல் தாங்கி நிற்கிறது.

ஒரு புல்லாங்குழல் வியாபாரி அழகிய அரண்மனை

08ம் பக்கம் பார்க்க......




புத்தர் பெருமானின் சீடர்கள் அவரைக் காண ஆவலுடன் காத்திருந்தனர். எப்போதும் போலப் புத்தர் வந்தார். அது காலை நேரம். அவர் தனது கையில் ஒரு சிறிய துணியை ஏந்தி வந்தார்.

வந்ததும் அங்கிருந்த சிறிய மேடையின்மீது அமர்ந்தவர் தனது கையிலுள்ள துணியைப் பிரித்தார். அது ஒரு துண்டு அளவுக்குப் பெரியதும் அல்ல; அதே சமயம் மிகச் சிறியதும் அல்ல; ஒரு சின்னஞ்சிறிய குழந்தைக்குச் சுற்றும் அளவுக்குச் சிறியதாயிருந்தது.

இதை வைத்து இன்று ஏதோ ஒரு பாடம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்த சீடர்கள் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

புத்தர் பெருமான் தலைநிமிராமல் அந்தத் துணியில் முடிச்சுக்களைப் போட ஆரம்பித்தார். ஒன்றன்பின் ஒன்றாக அதில் சில முடிச்சுக்களைப் போட்ட புத்தர் தலை நிமிர்ந்து தன் சீடர்களையே சற்று நேரம் பார்த்தார். பிறகு பேசினார் : "இதோ இந்தத் துணியைப் பாருங்கள். இது நான் கொண்டு வந்தது. இதில் நான் ஐந்து முடிச்சுக்களைப் போட்டிருக்கிறேன். இப்போது நான் கேட்கும் கேள்வி என்னவென்றால் இந்தத் துணி நான் கொண்டு வந்த போதிருந்த துணிதானா? அதே துணிதான் என்றால் இதில் முடிச்சுக்கள் இருப்பதும் இல்லாததும் ஒன்றுதானா?" என்று கேட்டார்.

அப்போது அங்கிருந்த புத்தரின் சீடர்களில் ஒருவனான ஆனந்தன் எழுந்தான். "புத்தர் பெருமானே, இரண்டும் ஒரே துணிதான். முடிச்சுக்கள் இல்லாத துணி எதுவோ அதுவே முடிச்சுக்கள் போட்ட நிலையிலும் இருக்கிறது. முன்பு இதில் முடிச்சுக்கள் இல்லை. குழந்தையின் மனம் போல் இது நிர்மலாமாயிருந்தது. ஆனால் இந்த முடிச்சுக்களைப் போட்ட பின் பந்த பாசங்களில் உழலும் மனம் போல் அதனைக் களங்கப்படுத்தியுள்ளது. அவ்வளவே" என்றான்.

"சரியாகச் சொன்னாய் ஆனந்தா! எல்லா ஜீவன்களின் மனமும் இயல்பிலேயே தெய்வத்தன்மை உள்ளவைதாம். எல்லாருமே ஒரு வகையில் புத்தர்களே. ஆசை பாசம், போன்ற பல முடிச்சுக்களில் சிக்கி, சிக்கல்களின் விளைவாகத் தனிமைப்பட்டுத் தன்னிலிருந்தே தான் ஒதுங்க விரும்பியும் விரும்பாமலும் பல செயல்பாடுகளைச் செய்து ஒவ்வொருவரும் தனித்தனி உலகமாகி ஒவ்வொரு மனமும் உணர்ச்சிக் கடலாகி அந்த அலைகளிலேயே அடித்துக் கொண்டு போகப்படுகிறோம்."

இவ்வாறு கூறிவிட்டு சற்று நேரம் மௌனமாயிருந்த புத்தர், "சரி, முடிச்சுக்களைப் பார்த்தீகள். இனி இந்த முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டும். அது எப்படி?" என்றார்.

புத்தரின் மற்றொரு சீடனான சாரி புத்தன் எழுந்தான்.

"சுவாமி! சிக்கலை அவிழ்க்க வேண்டும் என்றால் முதலில் அவன் அருகில் போக வேண்டும். அந்த முடிச்சுகள் எந்த விதமாகப் போடப்பட்டு உள்ளன என்பதை உணர வேண்டும். அது இல்லாமல் அதை அவிழ்ப்பது எளிதல்ல. ஒரு முடிச்சுப் போடப்பட்ட விதம் எப்படியோ அதே விதத்தில்தான் அதை அவிழ்க்க வேண்டும். அப்போதுதான் துணி பாதிக்கப் படாமல் அதை அவிழ்க்க முடியும். அவ்வாறின்றி அதை அவிழ்ப்பதற்காக அதன்மீது வேகமாகச் செய்யப்படும் பிரயோகம் முடிச்சை மேலும் இறுக்குவது மட்டுமல்லாமல், துணியையும் கிழித்து விடும்."

சாரி புத்தன் சொன்னது கேட்டு தலையசைத்தார் புத்தர்.

"உண்மை! துணி முடிச்சுக்கள் கண்ணுக்குப் புலப்படும். மனமுடிச்சுக்கள் நம் கண்களுக்குப் புலனாவதில்லை. மனதை நெருங்கிப் பார்த்துச் சிக்கல்களை நாம் உணராதவரை வாழ்வின் முடிச்சுக்களை அவிழ்க்க இயலாது" என்றார்.

அவரவர் வாழ்வும் அவரவர் கையில்! உணர்ச்சிகளில் வசப்பட்டுப் பல முடிச்சுக்களைப் போட்டுப் பல சிக்கல்களை நாமே உருவாக்குகிறோம். வேகமான தீர்வு எனமென்மேலும் அவற்றில் சிக்கி விடுகிறோம். வாழ்வில் முடிச்சுக்கள் ஏற்படுவதே நம்மால்தான். அதற்கான தீர்வும் நம் கையில்தான் இருக்கிறது.

'இருக்குமிடம் விட்டு இல்லாத இடந்தேடி எங்கெங்கோ அலைந்திடுவாய் பாழ்மனமே' (பழம் பாடல்).

இறை சாயலாகப் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் உன்னதமான ஆனந்தம், மகிழ்ச்சி என்பவை இலவசக் கொடைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. நாம்தான் அதனை அதன் போக்கில் அனுபவிப்பதற்குப் பதிலாக நமது வாழ்க்கையைச் சிக்கல்கள் நிறைந்த துனப அனுபவமாக்கிக் கொள்கின்றோம்.

'சின்ன நூல் கெண்டா நம்மை சிறைப்பிடிப்பது?' என்ற ஜெயகாந்தனின் புத்தகத்தில் மனிதர்கள் எவ்வாறு ஒவ்வொரு நாளும் தாங்களாகவே தங்கள் வாழ்வில் பல முடிச்சுக்களைப் போட்டு முடிவில் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் எல்லாரையும் பெரிய சிக்கல்களில் மாட்டிவிட்டு போய்விடுகிறார்கள் என்பதை பல்வேறு சிறிய வாழ்க்கை எதார்த்தங்கள் வழியாகச் சுட்டிக்காட்டுவார்.

நமது உணர்வுகளைச் சரியான விதத்தில் கையாளப் பழகிக் கொண்டால் உறவு தொடர்பான பல்வேறு சிக்கல்களிலிருந்தும் நாம் நிச்சயம் விடுட முடியும். உணர்ச்சி வசப்பட்டு எடுக்கும் பல முடிவுகள்தான் நமது ஆனந்தம் நம்மைவிட்டு ஆரவாரத்துடன் விடைபெறக் காரணமாகின்றன.

"நம் உடலில் இயங்கிக் கொண்டிருக்கும் எண்ணங்களே உணர்வுகளை ஏற்படுத்துகின்றன" என்பது உளவியலாளர்களின் கருத்து. நாம் யோசிக்க நினைப்பதை நாமே தேர்ந்தெடுத்து அந்தச் சிந்தனைகள் மூலமாக நாமே நம்முடைய உணர்வுகளை உருவாக்குகிறோம்.

இந்த உணர்வுகளின் மீதே நாம் பல முடிவுகளையும் எடுக்கிறோம். பலர் கோபப்படக் கூடாது என்று நினைக்கிறார்கள். இந்த எண்ணமே எதிர்மறையாக அவர்கள் மனதில் உணர்வாகப் பதிய ஆரம்பிக்கின்றன. ஆனால் எதைச் செய்யக்கூடாது என்று நினைக்கிறார்களோ அதையே செயல்படுத்தத் தூண்டப்படுகிறார்கள். கோப உணர்வை எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாமல் சண்டையிடுவது, முறையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது, கத்துவது, மிரட்டுவது எல்லாமே கோபத்தின் பல்வேறு வெளிப்பாடுகளே. இவைகளுக்குப் பலியாகும்போது உறவுப் பரிமாற்றங்களில் மேலும், மேலும் பல முடிச்சுக்கள் விழுந்து உறவுச் சிக்கல் உண்டாகிறது.

மாறாக, கோபம் என்ற உணர்வை இயேசுவைப் போல் உரிய இடத்தில், உரிய நேரத்தில் முறைப்படி வெளிப்படுத்தப் பழகிக் கொண டால் வாழ்வு ஓர் ஆனந்த அனுபவமாகி விடும். இயேசு கோவிலில் புறா விற்றவர்களையும், மற்ற வணிகர்களையும் சாட்டையால் அடித்துத் துரத்தியதன் பின்னணியை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்றுக்கு பல மடங்கு விலை வைத்துக் கோவிலில் விற்கப்படும் காணிக்கைப் பொருள்களே இறைவனுக்கு ஏற்ற பலிப்பொருள் என்ற வியாபார லாப உள்நோக்கம் ஏழை மக்களின் ஆன்மீக உணர்வைக் காயப்படுத்தியது. இத்தகையவர்களைத்தானே இயேசு அன்று சாட்டையால் விரட்டி அடித்தார்!

நமது கோப உணர்வுகள் எதை வெளிக் காட்டுகின்றன? கோப உணர்வு பொங்கியெழ நாம் கொட்டிய வார்த்தைகளை மீண்டும் அள்ளி விட முடியுமா? வார்த்தைகளால் உடைந்து சுக்கு நூறாகிப் போன இதயங்களில் மீண்டும் புதிய துளிர் என்னும் உறவு மலருமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழியைப் புறக்கணியோம்

முனைவர் அ. மரிய தெரசா



ஒரு குழந்தைக்கு அதன் தந்தை யார் என அடையாளம் காட்டுவதால் மட்டுமல்ல, தான் பேசும் மொழியை குழந்தைக்கு முதலில் அறிமுகப்படுத்துவதாலும்தான் தாய்மை இன்றளவும் போற்றப்படுகின்றது. ஒரு தந்தைக்குக் கிடைக்காத சிறப்பு ஒரு தாய்க்கு உண்டு. அம்மா பேசும் மொழிதான் ஒருவரின் மொழியாகிறது.

ஒருவர் வளர்ந்த பின் ஆயிரக்கணக்கான பெண்களைச் சந்திக்கலாம். ஆனால் முதலில் உருவாக, வளர இடம் கொடுத்த கருவறை ஆயிரம் கதைகள் சொல்லும். அந்த உறவுக்கு ஈடாக எதுவும் இருக்க முடியாது. அதுபோலதான் தாய் மொழிக்கு நிகராக எதுவும் அமையாது.

உலகத் தரம் பெற்ற, செம்மொழி தகுதி பெற்ற, பலரும் கற்க வேண்டும் என விரும்பும் இலக்கண சுத்தமான, அமுதென்று போற்றப்பட்ட நம் தமிழ்மொழியின் இன்றைய நிலை சற்றுக் கவலை தருவதாகவே உள்ளது.

குழந்தையின் தாய்தான் தாய்மொழியைக் கற்பிக்கும் முதல் ஆசிரியை. அது பேசும் மழலை மொழி பிறருக்குப் புரியுதோ, இல்லையோ அதன் தாய்க்குப் புரியும். எனவே தான் 'தாய்க்குப் புரியாத பிள்ளை மொழி இல்லை' என்பர்.

பிறருக்குப் புரியாத மழலையில் வாய் மூடாமல் பேசிய குழந்தைகள் தற்கால பள்ளி, கல்லூரிகளில் பேசத் தெரியாத மாணவர்களாக உருவாகி வருவது நாட்டு வளர்ச்சியின் அறிகுறி அல்ல. மொழி வளர்ச்சி அதிகமாக இருக்கும் வயது பள்ளிப் பருவமும், கல்லூரிப் பருவமும் தான். யாராக இருந்தாலும் தாய்மொழியில்தான் சரளமாகப் பேச வரும். காரணம் நமது சிந்தனைப் பதிவுகள் என்றும் அதிகமாக இருப்பது அவரவர் தாய்மொழியில் தான். எனவே, கற்கும் காலத்தில் தாய்மொழியை இலக்கணச் சுத்தத்தோடும், உச்சரிப்பு ஒலியோடும் முழுமையாகக் கற்க வேண்டும். இந்த அடிப்படை பிற மொழிகளையும் பிழையில்லாமல், சுலபமாகக் கற்க உதவும்.

கேலி, கிண்டல் செய்யாமல், பள்ளி - கல்லூரிகளில் மொழி வகுப்புகளைப் புறக்கணியாமல் மொழியின் ஆழத்தை இலக்கணச் சுத்தத்தோடு கற்பிக்கும்போதே கற்றுக்கொண்டால், வாலிப வயதில் வேலை தேடும் போது பேசத் தெரியாமல் வெட்கப்பட வேண்டிய தேவை எழாது. அடித்தளம் உறுதியாகப் போடப்பட்ட கட்டடத்தின்மேல் எத்தனை தளங்கள் போட்டாலும் தாங்கும். உறுதியோடு அழகாகவும் இருக்கும். தாய்மொழிப் புலமையை வளர்த்துக் கொண்டு அதற்கு மேல் கற்கும் ஒவ்வொரு மொழியும் ஒரு மனிதனை உலக அரங்கில் உறுதியாக நிமிர்ந்து, உயர்ந்து நிற்க உதவும்.

மாறிவரும் பன்னாட்டுக் கலாசார உலகச் சூழ்நிலையில் பிற மொழிகளை அதிலும் குறிப்பாக உலக மொழியான ஆங்கிலத்தைக் கற்பது அடிப்படைத் தேவையாக உருவாகி வருகிறது. ஆனால் தாய்மொழியைப் புறக்கணித்து விட்டு பிற மொழிகளில் புலமை பெறுவது நாகரிகமுமல்ல. விவேகமும்ல்ல.

தாய்மொழிப் பற்று வேறு : பிறமொழிகளைக் கற்பது வேறு. இரண்டையும் குழப்பிவிடக் கூடாது. தெளிவு வேண்டும். தாய்மொழி ஒருவருக்கு முதலில் உடுத்தும் உள்ளாடையைப் போன்றது. எந்த நாட்டு ஆடையை அணிந்தாலும் உள்ளாடை அணியாமல், உரிய பாதுகாப்பு இல்லாமல் வெளியே மட்டும் விதவிதமான நாகரீக ஆடைகளை நாகரீகமானவர்கள் அணிவதில்லை.

இன்று நாட்டுக்குள் மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும் சுலபமாகச் சென்று வரக்கூடிய மக்களாகப் பலரும் மாறிவருகின்றோம். அதற்கு வேறு மொழிகளில் கண்டிப்பாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். செல்லுமிடமெல்லாம் மொழி தெரியாத காரணத்தால் பேசுவது புரியாமலும், சொல்வது தெரியாமலும் இருந்து விடலாகாது. ஏமாந்து போய்விடவும் கூடாது. பிறரால் நாம் ஏமாற்றப்பட்டு விடவும் கூடாது.

தாழ்மொழியில் பேசுவது நாகரிகக் குறைவு என எண்ணும் அறியாத, புரியாத குழந்தைகள் தங்கள் நிலையைச் சற்று அறிந்துகொள்ள வேண்டும். தாய்மொழியைப் புறக்கணிப்பது தாயைப் பழிப்பதற்குச் சமமானது.

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்... உலக அளவுக்குப் பேச்சுக் கலையில் வல்லவர்களாகத் திகழ்ந்த அறிஞர் அண்ணா, சுவாமி விவேகானந்தர், பேச்சுக்கலை வித்தகர் ஸ்ரீனிவாச சாஸ்திரி என யாராக இருந்தாலும் அவரவர் தாய்மொழியில் புலமையை வளர்த்துக் கொள்ளாமல், தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்தில் பேசிச் சாதிக்கவில்லை.

தாய்மொழியோடு உலக மொழியையும் கற்றதால்தான் பல சமயத்தவரும், பல நாட்டவரும் கலந்து கொண்ட சமய மாநாடுக்குச் சென்ற விவேகானந்தரால் தாய்மொழியில் அவர் கற்ற நம் நாட்டு ஆன்மீகச் சிந்தனைகளை வெளிநாட்டு மொழியால் உலக மக்களுக்கு அறிவிக்க முடிந்தது.

சமய மாநாட்டில் 'Brothers and Sisters' என அழைத்த முறையும், தொடர்ந்து பேசிய சரளமான ஆங்கிலமும் விவேகானந்தருக்கு வெளிநாடுகளில் அழியாத பெருமையைத் தேடித் தந்தது. ஏனெனில் அன்றுவரை அவர் அழைக்கப்பட்ட விருந்தாளியாக இருந்தும் அங்கு தங்குமிடத்துக்கே சிரமப்பட்டார். அன்றிலிருந்து எல்லா நாள்களிலும், எல்லா கூட்டங்களிலும் முக்கிய நபராகப் பேச அழைக்கப்பட்டார். அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சீடர்களும், சீடத்திகளும் பெருக ஆரம்பித்தனர்.

வீரப் பெண்மணியாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்று போராடிய தமிழ்நாட்டு வேலுநாச்சியாருக்கு ஐந்து மொழிகள் தெரியும். 1730 -களிலேயே ஆங்கிலேயரை எதிர்த்தவர் இவர். மெட்ராஸ் மாகாண மெட்ரிக் தேர்வில் முதல் மாணவியாக வெற்றி பெற்ற கவிக்குயில் சரோஜினி நாயுடுவுக்கு ஆங்கிலேயர்களே வியக்கும் அளவுக்கு ஆங்கில மொழிப்புலமை இருந்தது. ஒருநாள் முழுவதும் தன் தந்தையால் வீட்டு அறையில் சிறை வைக்கப்பட்டபோதும் 'அடிமைப்படுத்திய நாட்டு மொழியை மேலும் கற்கமாட்டேன்' என்று மாணவப் பருவத்திலேயே பிடிவாதமாக அவர் பேசியது இன்றும் பெருமையோடு நினைவு கூரப்படுகின்றது.

பள்ளியில் பயின்ற காலத்தில், காகிதத்தில் எழுதி வைத்திருந்ததைக்கூட வாசிக்க முடியாத பயந்த குணம் படைத்தவராகத்தான் காந்தி இருந்தார். பிற்காலத்தில் அதிராமல், குரலை உயர்த்தாமல், மெல்லிய குரலில் பேசியே கோடிக்கணக்கான மக்களை ஈர்த்த காந்தி தனது தாய்மொழி குஜராத்தியைக் கற்காமலேயே அயல்மொழிகளைக் கற்கவில்லை. பல மொழிகளைக் கற்கும் ஆர்வத்தால் மட்டுமல்ல, தமிழ்மொழியில் திருக்குறளைப் படிக்க வேண்டும் என்ற ஆசையால்தான் தமிழ் மொழியைக் கற்க ஆரம்பித்தார் காந்தி.

தமிழ்மொழி பேசும் நமக்கு எத்தனை திருக்குறள் தெரியும்? இம்மைக்கும், மறுமைக்கும் ஒரு மனிதனுக்கு என்னென்ன வேண்டுமோ எல்லாமே அதில் இருக்கின்றனவே! தன்னைச் செதுக்குவதன் மூலம் உலகை மாற்ற விரும்பிய மகாத்மாவுக்கு இந்த ஆசை வந்ததில் வியப்பொன்றும் இல்லை.

அடிப்படை ஆணிவேர் இல்லாமல் சரியாக மண்ணில் வேரூன்ற முடியாமல் நிற்கும் மரத்தைப்போல, முறையான நீர்ப் பாய்ச்சுதல் இல்லாமல் செழிப்பாக வளர முடியாத தாவரத்தைப்போல, அடிப்படையான தாய்மொழிப் புலமை இல்லாமல் அரை வேட்காட்டு ரொட்டிகளாக (half baked bread) பெரும்பான்மையான இன்றைய நம் நாட்டுக் குழந்தைகள் உருவாகி வருகின்றார்கள். அவர்களோடு பேசிப்பாருங்கள். இந்நிலை புரியும். அவர்கள் எழுதுவதை வாசித்துப் பாருங்கள், உண்மை நிலை தெரியும். அவர்கள் அனுப்பும் குறுந்தகவல்களை (SMS) ஆராய்ந்து பார்க்கும் அனைவருக்கும் வேறு விளக்கங்கள் சொல்லத் தேவையில்லை.

"ஒரு நாட்டை அழிக்க வேண்டுமென்றால் மக்கள் பேசும் மொழியை அழித்தால் போதும்" என்பர். நம் வீடுகளில் நாம் பேசும் மொழி எது? தாய்மொழியில் பேசுகின்றோமா? தப்புத் தப்பாக ஆங்கிலத்தில் இரண்டு வார்த்தை பேசினால் போதும்; 'என் பிள்ளை ஆங்கிலத்தில் எவ்வளவு அழகாகப் பேசுகிறது தெரியுமா உங்களுக்கு?' எனப் புரியாமல் பேசும் பெற்றோரை நாம் என்னவென்பது? என்றைக்கு நாம் மாறப் போகின்றோம்?

பிற மாநில மக்களைப் பார்க்கின்றோம். எங்கே சென்றாலும், எந்த மாநிலத்தில் பணிபுரிய நேர்ந்தாலும், அந்தந்த மாநில மொழிகளில் பேசத் தெரிந்திருந்தாலும் தங்கள் இல்லங்களில் அவரவர் தாய்மொழியில்தான் உரையாடுகிறார்கள். நீங்கள் நிலவுக்குச் சென்றால் கூட "சார் சாயா" எனக் கேட்ட வண்ணம் ஒரு மலையாளி அங்கே இருப்பார் எனச் சொல்லுமளவு மிகச்சிறிய மாநிலத்தில் பிறந்த அவர்கள் பணி காரணமாக உலகின் எல்லா இடங்களிலும் பரவி வசிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் பேசும் மலையாள மொழியை அவர்கள் மறப்பதில்லை. பேச வெட்கப்படுவதில்லை. மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதில்லை. பிற மொழிகளில் பேசத் தெரியாமல் திண்டாடுவதில்லை.

பள்ளிக்கூடங்களில் சேர்ந்த ஆரம்பக் காலங்களிலேயே நாம் உயர் கல்வி கற்று முடிக்கப் போகின்றோமா? இல்லையே! ஆரம்ப வகுப்புகளில் பயிற்றுவிக்கப்படும் தாய்மொழியை முறையாகக் கற்று வலுவான அடித்தளம் அமையுங்கள். அத்தோடு தேசிய மொழியையும், அதன் பின் உலக மொழியையும் கற்றுத் தெளிவு பெறுங்கள்.

இக்கால மாணவர்களான நீங்கள் குண்டுச்சட்டியில் குதிரை ஓட்ட வேண்டியவர்கள் அல்லர்; வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்க வேண்டியவர்களும் அல்லர். எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் செல்லத் தயார் நிலையில் இருக்க வேண்டியவர்கள். பன்னாட்டு .உலகச் சூல்நிலையில் வாழக்கூடிய.பன்முக வளர்ச்சியோடு வளர வேண்டிய இக்கால மாணவர்களுக்கு இந்த அடித்தளம் இறுதிவரை கைகொடுக்கும்.எந்தத் துறையில் பணிபுரியச் சென்றாலும், எந்த இடத்தில் பணி நியமனம் பெற்றாலும், எந்தப் பதவியை வகிப்பதாக இருந்தாலும் இன்னொரு மொழி பெயர்ப்பாளரைத் தேட வேண்டிய தேவை எழாது.

ஆரம்பகால மொழிப்பாடங்களில் சேர்க்கப்பட்டிருப்பவை அடிப்படை ஆத்திசூடிகளும், ஒழுக்கநெறிகளும், வாழ்வியல் உண்மைகளுமே. ஆரம்ப அரிச்சுவடிகளைக் கற்காமல் விடுவதும், கவனம் செலுத்தாமல் இருப்பதும் அடித்தளம் அமைக்காமல் கட்டப்படும் வீட்டுக்கு ஒப்பாகும்.

வாசிப்பதிலும், எழுதுவதிலும், பேசுவதிலும், செயல்படுவதிலும் கற்றவருக்கும் - கல்லாதோருக்கும் வேறுபாடு வேண்டுமல்லவா! சிந்திப்போம்.

'கிள்ளைக்கும் சொன்னேன் பிள்ளைக்கும் சொன்னேன்
கிள்ளை பேசிற்று பிள்ளை ஊமையாச்சு'

என்ற சொற்றொடர் கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சொல்லப்பட்டதல்ல என நம்புகின்றோமா?




### தூய்மை அன்பு

இனம் புரியாமல்
இதழ்கள்
சிரிப்பில் மலர்கின்றன
இதயங்கள் இமய
அளவு
மகிழ்ச்சியால்
மலர்கின்றன

மௌனங்கள்
நீடிக்கின்றன
கோபங்கள்
தணிகின்றன
காயங்கள் காய்கின்றன
எங்கிருந்து வந்தது
இவ்வன்பு?

### வீழ்ச்சி

*வீழ்ச்சி என்பதோ நீருக்கு!*
*ஆனால் மகிழ்ச்சி மனிதருக்கு!*
*தியாக வீழ்ச்சி என்பதோ*
*தாய்க்கு!*
*ஆனால் எழுச்சி மகனுக்கு!*
*வீர வீழ்ச்சி என்பதோ*
*சூழ்ச்சியற்ற தலைவர்களுக்கு!*
*ஆனால் எழுச்சி*
*இப்புதிய பாரிற்கு!*
*வீழ்ச்சியும், எழுச்சியும்*
*கடலைகளுக்கு அல்ல*
*என்றும் அது மாணவ,*
*மனித சமுதாயம்*
*முழுவதற்குமே!*

**கிளாரா டார்வின்.**

### காதல்

சிலந்தி
வலையில்
சிக்கிய பூச்சி!
**கன்னிகா**

### சிற்பி

உளி எனும் கல்
இதயங்கள்
கனிந்த இதயத்தில்
வெட்டிய
வார்த்தைகள்
வெளியேறின!
செதுக்கிய
சிற்பங்களாய்
பேச்சினில்!
கிளாரா டார்வின்.

### புல்லாங்குழல்

திறந்த
காட்டில்
பிறந்த குழந்தை
இசை!
கன்னிகா

### சிலந்தி

வலை
விரித்துக்
காத்திருக்கும்
வேடன்!
கன்னிகா

### இறைவன் தந்த கொடைகள்

கொடுப்பது இறைவனடா!
அதைக் கெடுப்பது
மனிதனடா!
படைப்பது இறைவனடா!
அதைப் பழிப்பது மனிதனடா!
குறைகளைக் களைவது
இறைவனடா!
அதைக் குற்றம் சொல்வது
மனிதனடா!
கிளாரா டார்வின்

### வானம்

நிலாப் பெண்
கட்டிக்கொண்ட
நீல நிறச்
சேலை!
**கரோலின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# இருவர்

**புனிதர்கள் பேதுரு – பவுல் பெருவிழா (29 ஜூன் 2014) சிறப்புக் கட்டுரை**



ரொம்பப் பழசுதான் என்றாலும், சிறிது முயற்சி செய்து பார்த்தால் சிரிப்புவரும். இரண்டு ஜோக்குகள்!

ஒரு காய்கறி மார்க்கெட். இரண்டு மருமகள்கள் சந்தித்துப் பேசிக்கொண்டார்கள். அதில் ஒருத்தியின் மாமியார் அண்மையில்தான் வீட்டின் பின் பக்கம் இருந்த கிணற்றில் தவறி விழுந்து அகாலமாக செத்திருந்தார். கொஞ்ச நேரம் சம்பிரதாயமாக துக்கம் விசாரித்த இன்னொருத்தி கடைசியாக 'ம்ஹூ.....ம்ம்' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அதற்கு இவள் "என்ன?" என்றாள். அவள், "இல்லை... எங்கள் வீட்டு பின்புறமும்தான் ஒரு கிணறு இருக்கிறது. எங்கள் வீட்டிலும் தான் ஒரு மாமியார் இருக்கிறார். ஏதாவது நடக்கிறதா? இதற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும்" என்று அலுத்துக் கொண்டாள். அதற்கு இவள் சுற்று வட்டாரத்தை ஒரு நோட்டம் விட்டுவிட்டு மெதுவாகச் சொன்னாளாம் : "இதெல்லாம் தானா நடக்கும்னு நினைத்தால் எப்படி? நாமதான் பிடிச்சுத் தள்ளி விடணும்."

ஒரு மறைக்கல்வி வகுப்பறை. பத்துக்கட்டளைகள் குறித்துப் பாடம் எடுத்துக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவர் எப்படித் தன் பெற்றோரைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்பது குறித்து 'பிதாவையும், மாதாவையும் சங்கித்திருப்பாயாக என்று நான்காம் கட்டளை பேசுகிறது. அதுபோல நாம் நம் சகோதர சகோதரிகளை எப்படி நடத்த வேண்டுமென்பது குறித்து ஏதும் கட்டளை இருக்கிறதா?' என்று கேட்டார்.

ஐந்து வயது ஜானி சட்டென்று "இருக்கிறது" என்றான். டீச்சர் ஆச்சரியமாக "எந்தக் கட்டளை அது?" என்று கேட்டார். ஜானி பக்கத்தில் உட்கார்ந்திருந்த தன் தம்பியை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே "கொலை செய்யாதிருப்பாயாக" என்றான்.

'ஏன் இவர்களுக்கு இந்தக் கொலைவெறி?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லா! உண்மை தான். ஆனால், யோசித்துப் பார்த்தால் ஏறக்குறைய நாம் எல்லாருமே இப்படித்தான். அதிகாரத்தையோ, அங்கீகாரத்தையோ யாருடனும் பங்கு போட மனசு லேசில் ஒப்புவதில்லை. பெரும்பாலும் தனி ஆவர்த்தனம் பண்ணவே ஆசைப்படுகிறோம். ஒன்று அவன்(ள்), இல்லை நான்! ஓர் உறையில் ஒரு வாள்தான் இருக்க முடியும். என்பது மாதிரியான சிந்தனை. 'அட அனுசரித்து, கொஞ்சம் விட்டுக் கொடுத்து சேர்ந்து வாழுங்களேன்' என்றால்... ம்ஹூம்.... அது ஆவதற்கில்லை. நம் முறுக்கேறிய ஈகோ அதற்கு ஒத்துழைக்காது. ஜூன் 29 ஆம் திகதி திருச்சபை கொண்டாடும் புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல் பெருவிழா இந்த மனோ பாவத்திற்கு மாற்றாக வருகிறது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பிரபல்யமில்லாத பார்த்தலமேயு, ததேயு போன்ற குட்டிக் குட்டி அப்போஸ்தலர்களுக்கெல்லாம் வழிபாட்டு அட்டவணையில் தனித் திருவிழா நாள்கள் இருக்கும்போது திருச்சபையின் தூண்களான பேதுருவுக்கும், பவுலுக்கும் சேர்த்து ஒரே ஒரு நாள்தான். ஜூன் 29!

கவனியுங்கள்! இன்றைய நாளின் வெளிச்சத்தை பேதுருவும், பவுலும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இருவரும் ஒரு சேர நின்று நம் மரியாதையையும் வணக்கத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். இத்தனைக்கும், இவர்கள் alter-egos கிடையாது. ஆதாரமாக மிகவும் வேறுபட்ட இரண்டு ஆளுமைகள் இன்று கை கோர்த்து நிற்கிறார்கள். இதில் ஒரு நீதி இருக்கிறது. சேர்ந்து செயல்படுவதற்கு நாம் ஒரே பின்னணி கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஒரே குழுவைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஒரே மொழி பேசுபவர்களாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஒரே மாதிரி சிந்திக்க வேண்டும் என்றுகூட அவசியம் இல்லை. அடிப்படைப் புரிந்துணர்வும், இலக்குக் குறித்த தெளிவும், கொஞ்சம் விட்டுக் கொடுத்தலும் இருந்தால் போதும். யாரும் இணைந்து செயல்படலாம். பேதுருவும், பவுலும் திருச்சபைக்காகச் சாதித்துக் காட்டியது இதுதான்.

பேதுரு, பவுல் என்கிற இரண்டு ஆளுமைகளின் தனித்துவக் குணாதிசயங்களை விவிலியம் தரும் விவரங்கள் வாயிலாகப் பார்க்கலாம்.

### 1. குடும்பப் பின்னணி

பேதுரு ஒரு யூதர். அவர் குடும்பம் கலிலேயாவில் உள்ள பெத்சாய்தாவில் இருந்தது. எந்த வருடம் பிறந்தார் என்ற தகவல இல்லை. இவருடைய தந்தை பெயர் யோனா (மத் 16:17). பேதுருவின் இயற்பெயர் சீமோன். இயேசு அதை மாற்றி 'பேதுரு' என்று வைக்கிறார். இயேசுவின் மற்றொரு சீடர் அந்திரேயா. பேதுருவின் உடன் பிறந்த சகோதரர். (மாற்கு 1:29-34) பகுதி இயேசு பேதுருவின் மாமியாரைக குணப்படுத்தும் நிகழ்வைச் சொல்கிறது. ஆக, பேதுரு நிச்சயம் திருமணமானவர். 1கொரிந்தியர் 9:5 இன்படி பார்த்தால் கொரிந்து நகரில் பேதுரு நற்செய்தி அறிவித்தபோது அவர் மனைவியும் உடன் சென்று பணி புரிந்திருக்கிறார்.

பவுலும் யூதரே. கூடுதலாக இவர் ஓர் உரோமைக் குடிமகன். ஆசியா மைனரில் உள்ள தர்சு நகரில் கி.பி. 1-5 வாக்கில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். இயற பெயர் சவுல். மனமாற்றத்திற்குப் பின 'பவுல்' என அறியப்பட்டார். வேறு தேசத்தில் பிறந்து வளர்ந்தாலும், தன் யூத வேர்கள் குறித்து பவுலுக்கு மிகப் பெருமிதம் 'இஸ்ரயேல் இனத்தவன். பெஞ்யமின் குலத்தவன். எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயன்' என்று பிலிப்பியர் 3:5 இல் தன்னைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைகிறார். பவுலின் தந்தை ஒரு பரிசேயர். திப 23:6 இல் தன்னை ஒரு பரிசேயனாக பவுல் முன்னிறுத்துகிறார். 1கொரிந்தியர் 7:8 இன்படி பவுல் திருமணமாகாதவர் என்று வல்லுநர்கள் அனுமானிக்கிறார்கள்.

### 2. கல்வி மற்றும் தொழில்

தி.பணி 4:14 பேதுருவும், யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதை தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால் அவர்களது துணிச்சலைக் கண்டு வியப்படைந்தனர் என்று சொல்கிறது. பேதுரு ஏட்டுப் படிப்பாளி அல்ல; அவர் பிறந்து வளர்ந்த பெத்சாய்தாவில் கிரேக்கத் தாக்கம் அதிகம். முறையான கல்வி பெறவில்லையென்றாலும், அந்தச் சூழல் தந்த பொதுவான அறிவு இருந்தது. தொழில் மீன்பிடித்தல்தான். பெத்சாய்தா மற்றும் கப்பர்நாகூம் அவரின் பிரதான தொழில் களங்கள். யோவான் 21:1-3 இயேசு உயிர்த்த பிற்பாடு பேதுரு மீண்டும் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றதாகச் சொல்கிறது.

பவுல் சிறந்த படிப்பாளி. இளைய வயதிலேயே எருசலேமுக்கு அனுப்பப்பட்டு யூத குரு கமாலியேலிடம் பாடம் கற்றார். 'கமாலியேலின் காலடிகளில் அமர்ந்து நம் தந்தையரின் திருச்சட்டங்களில் நுட்பமாகப் பயிற்சி பெற்றவன்' என்று திரு 22:3 இல் பவுல் தன்னைக் குறித்துச் சொல்கிறார். கிரேக்கச் செவ்விலக்கியம், தத்துவம் மற்றும் ஒழுக்கவியலில் பவுலுக்கு நன்கு புலமை இருந்தது. தம் கடிதங்களில் அவர் எடுத்தாளும் உருவகங்கள், கருததுக்கள் இதற்குச் சான்று. பிற இனத்தார்கள் மத்தியில் பவுலின் நற்செய்திப் பணி எடுபட்டதற்குப் பிரதான காரணம், அவரின் இந்தக் கல்விப் பின்புலமே. அவர்களின் பாஷையில் அவர்களுக்கு எளிதில் புரியும் விதத்தில், இயேசுவின் செய்தியைக் கடத்தும் வித்தை பவுலுக்குத் தெரிந்திருந்தது. குடும்பப் பாரம்பரியம் காரணமாக சிறு வயதிலேயே பவுல் கூடாரம் கட்டும் தொழில் கற்றிருந்தார். அது பின்னாளில் மறை பரப்புச் சுற்றுப் பயணம் செய்யும்போது அவருக்குக் கை கொடுத்தது. கொரிந்து நகரில் அக்கிலா, பிரிஸ்கில்லா ஆகியோருடன் சேர்ந்து பவுல் இத்தொழில் செய்ததாக தி.ப. 18:3 சொல்கிறது.

### 3. இயேசுவுடன் தொடர்பு

மத்தேயு 4:18-20 இக் கலிலேயக் கடலில் மீன்பிடித்துக் கொண் டிருந்த பேதுருவை இயேசு அழைக்கிறார். அதிலிருந்து இயேசு-பேதுரு உறவு ஆரம்பிக்கிறது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பேதுருவே இயேசுவின் ஆஸ்தான சீடர். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் தரும் அப்போஸ்தலர்கள் பட்டியலிலும் பேதுருவின் பெயர்தான் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசு சிறப்பு அலுவலர்களுக்காக மூன்று பேர் அடங்கிய ஓர் உயர்மட்டக் குழு வைத்திருந்தார். அதிலும் பேதுரு இருந்தார். யாக்கோபும், யோவானும் மற்ற இரண்டு பேர். யாயீரின் மகளை உ[illegible] உருமாற்றம் (மாற்கு 9:2), கெத்சமனிதோட்ட செபம் (மாற்கு 14:33) ஆகிய முக்கிய நிகழ்வுகளின்போது இந்த உட்குழு இயேசுவிடம் இருந்தது. அப்போஸ்தலர்களின் பிரதிநிதியாக, அவர்களின் சந்தேகங்களை, கேள்விகளை இயேசுவிடம் முன்வைப்பவராக பேதுரு இருந்தார் (லூக்கா 12:41).

"நீரே மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்ற பேதுருவின் அறிக்கையும், "உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்' என்ற இயேசுவின் வாக்குறுதியும் (மத் 16:16-18) மிக முக்கிய மானவை. இதில் பேதுருவின் முதன்மைத்துவம் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவப்படுகிறது. இயேசு உயிர்த்த பிற்பாடு பேதுருவுக்கே முதலில் காட்சி தந்ததாக லூக்கா 24:34 இல பதிவு செய்கிறார்.

பவுலின் கதை வேறு. இயேசுவும், பவுலும் சமகாலத்தவர் என்றாலும், இயேசு வாழ்ந்த போது பவுல் அவரைச் சந்திக்கவில்லை. கி.பி. 35 வாக்கில் அவர் மேற்கொண்ட தமஸ்குப் பயணத்தில் பவுல் உயிர்த்த இயேசுவை எதிர்கொள்கிறார். அதுவே இயேசுவுடனான பவுலின் முதல் சந்திப்பு. அவர் வாழ்க்கையின் திருப்புமுனைச் சம்பவம் அது. திருத்தூதர் பணிகள் நூலில் மூன்று இடங்களில் இந்த நிகழ்வு குறிப்பிடப்படுகிறது (9:1-3122:1-22;26:9-24). சவுலைக் குறித்து அச்சம் தெரிவிக்கும் அனனியாவிடம் ஆண்டவர், "அவர் பிற இனத்தவருக்கும், அரசருக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக என் பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்து கொண்ட கருவியாய் இருக்கிறார்" என்று சொல்கிறார் (திப 9:15).

பவுல் தன் அழைப்பை உயிர்த்த ஆண்டவரிமிருந்து பெறுகிறார். தன் கடிதங்கள் எல்லாவற்றிலும் பவுல் தன்னை 'கிறிஸ்துவின் அப்போஸ்தலன்' என்றே குறிப்பிடுகிறார். பவுல் இந்த அப்போஸ்தலன் பட்டத்தை எடுத்துக் கொண்டது சில சலசலப்புக்களை உருவாக்கியிருக்க வேண்டும். 1கொரிந்தியர் 9:1-2 இல் அவர் இவ்வாறு எழுதுகிறார் : "நானும் ஒரு திருததூதன் இல்லையா? நான் ஆண்டவர் இயேசுவைக் காணவில்லையா? நான் திருத்தூதன் என்று மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாவிடினும் உங்களுக்கு நான் திருத்தூதன் தானே!"

ஆம், நிச்சயமாக பவுல் ஓர் அப்போஸ்தலரே! பிரசித்திமிக்க 13ஆம் அப்போஸ்தலர்!

### 4. இலக்கு மக்கள்

நற்செய்தியை அறிவிப்பதுதான் இரண்டு பேர்களுடைய பணி என்றாலும், பேதுருவும், பவுலும் தேர்ந்து கொண்ட இலக்கு மக்கள் வேறுபட்டவர்கள். பேதுரு யூதர்களுக்கு நற்செய்தி அறிவிப்பதில் கவனம் செலுத்தினார். பவுலோ பிற இனத்தார்களிடம் இயேசுவைக் கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டினார். இது இந்த இரண்டு அப்போஸ்தலர்களுக்கும் கடவுள் கொடுத்த சிறப்பு அழைப்பு. இதில் கலவரப்பட ஒன்றுமில்லை. கலாத்தியர் 2:7இல் பவுல் இப்படிச் சொல்வார்." "ஆனால் யூதர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் பணி பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது போலவே, பிற இனத்தாருக்கு அதை அறிவிக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள். பேதுரு யூதர்களின் அப்போஸ்தலன் என்றால், பவுல் பிற இனத்தாரின் அப்போஸ்தலன். ஆதாரமாக இருவரும் அப்போஸ்தலர்கள். இலக்கு மக்கள் வேறு வேறு. அவ்வளவே!

### 5. பரஸ்பர மரியாதை

பிற இனத்தவருடன் உண்ணும் விவகாரத்தில் "நான் கேபாவை நேருக்கு நேராய் எதிர்த்தேன்" என்று கலாத்தியர் 2:11இல் பவுல் சொன்னாலும், அவை எல்லாமே ஆரோக்கியமான பூசல்கள். பேதுருவின் முதன்மைத்துவ நிலையை பவுல் எப்போதும் மறுத்ததில்லை. 1கொரிந்தியர் 15:5 இல் இயேசு உயிர்த்தபின் கேபாவுக்கும், பின்னர் பன்னிருவருக்கும் தோன்றினார் எனப் பவுல் சொல்கிறார். கலாத்தியர் 2:9 இல் பேதுருவை திருச்சபைத் தூண்களில் ஒருவர் என அழைக்கிறார். தன்னை 'காலம் தப்பிப் பிறந்த குழந்தை' என வர்ணிக்கும் பவுல், "நான் திருத்தூதர்களிடையே மிகக் கடையவன்" என்று சொல்கிறார் (1கொரி 15:9). பேதுருவும் தன் கடிதத்தில் பவுலின் சிறப்பு வரத்தை அங்கீகரிக்கிறார். 2பேதுரு 3:16இல் "நம் அன்பார்ந்த சகோதரர் பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தின்படி இவ்வாறு தான் எழுதியுள்ளார்" எனக் கூறுகிறார்.

பேதுரு, பவுல் இரண்டு பேருமே கி.பி. 64-67 வாகில், நீரோ வேத கலாபனையில், உரோம் நகரில் மறைசாட்சிகளாக உயிர் துறந்தார்கள் என்று பாரம்பரியம் சொல்கிறது. பவுல் உரோமைக் குடிமகனானதால் வாளால் வெட்டப்பட்டும், பேதுரு அவருடைய வேண்டுகோளுக்கிணங்க சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டும்! கொலை செய்யப்பட்டார்கள். பேதுருவும், பவுலும் பக்கம் பக்கம் நின்று இருவரும் ஆளுக்கொரு கையை நீட்டி, திருச்சபையைத் தாங்கிப் பிடிப்பது மாதிரி ஒரு பழங்கால உருவச் சின்னமொன்று (icon) இருக்கிறது. அந்தச் சின்னம் இருவரின் வாழ்வு மற்றும் பணியைக் கச்சிதமாகப படம் பிடித்துக் காட்டுகிறது. எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் பேதுருவும், பவுலும் திருச்சபயை வளர்ப்பதிலேயே முனைப்பாக இருந்தார்கள்.

இந்த இருவரும் இன்றைக்கு நமக்குக் கொடுக்கும் அழைப்பு இதுதான். "உங்கள் வேற்றுமைகளைக் களைந்துவிட்டு, திருச்சபையைத் தாங்கிப்பிடியுங்கள்!"

# வாசல் கோலம்!

சகோ. இராக்கினி SMSM



வட்டம் வட்டமாக இருக்கும் மிகச்சிறிய குறி புள்ளி. தமிழ் இலக்கணத்தில் புள்ளிகளைப் பற்றி இலக்கண ஆசிரியர் காற் புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முழுப்புள்ளி, முற்றுப்புள்ளி என்று புள்ளியின் அடையாளங்களை வடிவமைத்துள்ளார்.

இலக்கணம் சார்ந்த புள்ளிகள், 6 புள்ளிகள் எடுப்பவரே இந்தப் பிரிவில் முதல் அணியாக வரமுடியும் என்று கணிதப் போட்டிகளிலும், புள்ளிபோட்ட சேலைக்காரி என்று ஒரு பெண்ணை அடையாளப்படுத்துவதற்கும், 'இதோ இவர் தான் இந்த ஊரிலே மிகப்பெரிய புள்ளி' என்று குறிப்பிடுவதற்கும் உதவுகின்றன. புலர் காலைப பொழுதில் நண்பருடன் நடப்பதற்கும், கூடுதல் எடைக்கு விடை கொடுக்கவும், நோய்க்குத் தடை போடவும் நடைப்பயிற்சி நல்லது. அதிகமாக நடப்பது ஆண்களே! பெண்கள் அதிகம் நடக்காமல் வாசலில் கோலம் போடுவதே அவர்களுக்கு ஆரோக்கியம் தரும் அழகிய பயிற்சி.

வாசல் கோலங்கள் மாக்கோலம், பூக்கோலம், வண்ணக்கோலம் என்று விதவிதமான கோலங்கள் புள்ளிகளை இணைக்க, கோடுகளும் கோலமாய் மாறுகின்றன. வியப்பூட்டும் வி[illegible]ந்தையாய் வாசல் கோலங்கள் வ[illegible]டுகளின் முன் பாகவும், நிகழ்ச்சிகளின் தொடக்கமாகவும் நம் சிந்தனைகளுக்குத் தூண்டுகோலாயிருக்கின்றன. பெண்கள் காலை நேரத்தில் குனிந்து நிமிர்ந்து கோலம் போடும்போது நல்ல ஆரோக்கியமான பிராண வாயு கிடைக்கிறது. உடலுக்கு மட்டுமல்ல, மனத்தையும் பக்குவப்படுத்துகின்றது. உடலும், மனமும் இணைந்து செயற்பட்டால் தான் அனைத்தும் எளிதில் சாத்தியமாகும் என்பதைக் கோலங்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன.

கோலம் போட்டுவிட்டு நடுவில் சாணம் வைத்து அதில் பூசணிப்பூவை வைத்துவிட்டு நிமிர்ந்து ஒரு நிமிடம் நின்று நிலத்தைப் பாக்கின்றபோது ஏற்படும் நிறைவும், மகிழ்ச்சியும்

08ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் பிரசன்னத்தில்

**5ம் வருட நினைவு** | **8ம் மாத நினைவு** | **12ம் வருட நினைவு**



பிறப்பு : 13.07.1914
இறப்பு : 11.11.2009

## ஞானப்பிரகாசம் பத்திநாதர்

விண்ணுலகில் 5ம் வருட நினைவும் மண்ணுலகில் 100வது பிறந்த தின நினைவும்



மலர்வு : 03.12.1949
உதிர்வு : 09.10.2013

## அருட்சகோதரி. புளொறினா பத்திநாதர் (H.C)

இந்த உலகில் ஒன்று சேர்ந்து வாழ்ந்த காலம் கொஞ்சமே என்றும் அழியா உறவு உண்டு இறைவன் வாழும் வீட்டிலே



பிறப்பு : 25.03.1916
இறப்பு : 27.06.2002

## மரியம்மா பத்திநாதர்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் என்றும் உம்மை நாம் மறவோம்.

"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பின் ஐயா, அம்மா, சகோதரி,
நீங்கள் மூவரும் ஒன்றாக இறைவனின் பாதத்தில் மலர்ந்து மகிழ்ந்திருப்பதுபோல், ஒருநாள் நாமும் உங்களுடன் இறைவனின் பாதத்தில் ஒன்றாக மலர்ந்து மகிழ்ந்திருப்போம். இது நிச்சயம்.

அன்புடன்
அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் மற்றும் குடும்பத்தினர்.

அனுக்கை
அளவெட்டி

Add - 48/14

# நீங்காத நினைவுகளுடன் நான்காம் ஆண்டு

## அருட்சகோதரி. மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை (தி.கு.க)



அன்னை மடியில் :- 04.09.1939
ஆண்டவன் அடியில் :- 10.07.2010

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகின்றேன்"

ஆண்டுகள் நான்கு கடந்திடினும்
ஆறிடுமோ எம் நெஞ்சங்கள்
தாயின் கருவில் உருவாகு முன்னரே
தேவன் பெயர் சொல்லி அழைத்த சகோதரியே!
எங்கள் இதயத்தில் எழுந்திருக்கும் கோயிலில் நீர்
என்றும் இருப்பீர் அம்மா! ஏதும் இதில் மாற்றமில்லை

இவரின் ஆன்மா நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 04.07.2014 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும், 10.07.2014 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

42/5 மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

Add - 49/14

பிரிவு அகலா உறவுகள்.

# 31ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி திரேசம்மா யோக்கீம்பிள்ளை (மணி)

(பெரியவிளான் - இளவாலை)

**மலர்வு : 10.08.1928**
**உதிர்வு : 09.06.2014**

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

உள்ளன்பால் உறவாடி
உணர்வுகளால் அன்பைப் பகிர்ந்து
உள்ளத்தில் நிறைந்தவரின்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுவோம்.

இழப்பின் துயர் பகிர்ந்த யாவருக்கும் எம் இதய நன்றிகள்

Add -50/14

குடும்பத்தினர்.

# துயர் பகிர்கின்றோம்



## கிறிஸ்துராசா கௌதினி

**பிறப்பு : 07.02.1986**
**இறப்பு : 22.06.2014**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

"உண்மை அன்பின் அடையாளம் கல்லறையிலா எழுதப்பட்டுள்ளது?"

இவரின் பிரிவில் துயருறும்
முகாமையாளர்,
பாதுகாவலன் ஆசிரியர்,
அச்சகப் பணியாளர்கள்.

# நன்றி நவிலல்

பரிசுத்த பரம திரித்துவத்திற்குப் புகழும் மகிமையும் ஆராதனையும் உண்டாவதாக

மரியே வாழ்க!

எனது மகன் வெளிநாட்டில் நீண்ட காலமாக இருந்தபோதும் நிரந்தர வேலைவாய்ப்பு தற்போது கிடைத்தமைக்காகவும், திருமணம் நிறைவேறியதற்காகவும் புனிதர்களான யூதாததேயு, அந்தோனியார் யோசேவாஸ் அடிகள், பியோ ஆண்டகை, அல்போன்ஸ் அம்மாள், சிறிய புஸ்பம், அன்னை திரேசா இவர்களின் பரிந்துரையால் என் வேண்டுதல்கள் கிடைக்கப்பெற்றன. இப்புனிதர்களின் நாமம் புகழப்படுவதாக நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

இறைவா உமக்குப்புகழ்!

Add - 51/14

ஓர் அடியாள்.

# சரி விடு சிரி

தொகுப்பு : DAJB



குடிகாரன் 1 :
"குடி குடியைக் கெடுக்கும்கிறது சரியாப் போச்சு...."
குடிகாரன் 2 :
"எதனாலப்பா?"
குடிகாரன் 1 :
"கல்யாணம் ஆன உடனேயே என் பொண்டாட்டி என்ன குடிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டா..."



பெண் 1 : "என்னடி இது.... அநியாயமா இருக்கே உன் வீட்டு வேலைக்காரி லீவு போடற அன்னிக்கு உன் வீட்டுக்காரரும் லீவு போடுறாரே...?"
பெண் 2 : "சும்மா இருடி, நான தான் அவரை லீவு போட வைப்பேன். ஏன்னா வேலைக்காரி வீட்டுபோன வேலையை யாரு செய்றது?"



மனைவி : "நமக்குக் கல்யாணம் முடிஞ்சி இன்னியோட பத்து வருசம் ஆகுது...'
கணவன் : "எனக்கு அதெல்லாம் மறந்து போச்சு."
மனைவி : "இது கூடவா மறந்து போச்சு?"
கணவன்: "ஆமாண்டி நல்ல விசயங்களை மட்டும்தான் நான் ஞாபகம் வச்சுக்குவேன்."



காதலன் :
"கண்ணே, உனக்காக இமயமலையைக் கூட தாண்டுவேன்."
காதலி :
"சரி, அது கெடக்கட்டும். இப்ப எதுக்காக கால நொண்டுற?"
காதலன் :
"உங்க வீட்டு கேட்டைத் தாண்டும் போது தடுக்கி விழுந்திட்டேன்."



ஆசிரியர் :
உங்க பையன் இங்கிலீஷ் தமிழ் கணக்கு என எல்லா பாடத்துலயும் ரொம்ப ரொம்ப வீக்கா இருக்கான்...."
அப்பா :
"அதுக்கு நான் என்ன செய்யணும் சார்?"
ஆசிரியர் :
ஆயிரம் ரூபாய் டொனேஷன் கொடுத்தீங்கன்னா எல்லாம் சரியாய்டும்."



ஆசிரியர் :
"மனுசனா பொறந்தா ஏதாவது சாதிக்கணும்?"
மாணவன் :
"சாரி சார், நாங்க குழந்தையாதான் பிறந்தோம்."



மனைவி:
குடிகாரக் கணவனுக்குப் பாடம் புகட்ட பேய் வேடம் போட்டுப் பயமுறுத்த முயற்சி செய்கிறாள்.
கணவன் :
"நீ என்னை பயமுறுத்த முடியாது. நான் உன் அக்காவையே கல்யாணம் பண்ணியிருக்கேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு எனும் கொடையை நாமே அழித்துக்கொள்வதா!

## அலசலும் உரசலும் 12

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

(சமகால சமூக ஆன்மீகத் தொடர்)

இன்று நாம் வாழும் உலகம் வாழ்வைவிட அழிவையே விரும்பும் உலகம் போல் தோன்றுகின்றது. இன்று அழிவின் வடிவங்கள் மாறுபடுகின்றதேயொழிய அழிவு மனித வாழ்வின் இருப்பை இருந்த இடம் தெரியாமல் சிதைந்து போகச் செய்கின்றது. போர்களால், வன்முறைகளால் ஏற்படுவது மட்டும் அழிவல்ல; மாறாக மனிதனுக்கே உரித்தான மனித மாண்பிற்கு ஒவ்வாத தூய்மையற்ற செயல்களும் மனிதர்களின் வாழ்வை அழித்து வருகின்றது. மனிதனின் உள்ளத்தில் எழும் நெறிப்பிறழ்வான சிந்தனைகள், எண்ணங்கள் மனித உடலை, உள்ளத்தை, ஆன்மாவை சிதைத்து வருவதை இன்றைய காலகட்டத்தில் காணுகின்றோம். விஞ்ஞான ரீதியாக பரிணாம வளர்ச்சியின் விளைவாக மனித குலம் தோன்றியதை ஏற்றுக்கொண்டாலும், மனிதனுக்கே உரித்தான பகுத்தறிவு, ஆன்மா மனிதனின் மாண்பை தனித்துவமாக வெளிப்படுத்த உதவுகின்றது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. இன்றைய சமூகத்தில் நாம் காணும் கலாசார சீரழிவுகள் இருளின் சக்திகளின் கட்டுப்பாட்டில் பகுத்தறிவும் ஆன்மாவும் (மனச்சான்று) இருப்பது போல் தெரிகின்றது. இதன் விளைவாகத்தான் ஒரு கடிவாளமற்ற சமூகத்தை நோக்கிப் பயணிப்பதாகத் தெரிகின்றது.

### தடுமாறும் வாழ்க்கையில் தடங்கள் மாறும்

வாழ்வு என்பது இறைவன் மனிதனுக்கு அளித்த உயரிய, உன்னத கொடை என்பது தெளிவான விடயமாகும். இக்கொடையை இறைவனின் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தி தன்னையும், பிறரையும், பிரபஞ்சத்தையும் விருத்தி செய்து வாழவே அளிக்கப்பட்டது. ஆனால் இன்று நடப்பதென்ன? சுயநலம் பெருகி தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையில் பயன்பாட்டு உலகமாக மாற்றிவிட்டான். இன்றைய மனிதன் பயன்பாட்டைமையமாக வைத்தே வாழ முயற்சி செய்கின்றான். உதாரணமாக தனக்கு எதுவும் கிடைக்க வேண்டும் என்பதை அடிப்படையாக வைத்தே தேடலில் ஈடுபடுகின்றான். இதற்கு ஆன்மீகமும் விதிவிலக்கானதாகத் தெரியவில்லை. கடவுளைத் தேடுகின்றோம்; எதற்காகத் தேடுகின்றோம் என்று சிந்தித்துப் பார்த்தால் தேவைகள் கருதியே தேடுகின்றோம். இதுவும் ஒரு பயன்பாட்டு ஆன்மீகமாகவே நோக்கப்பட வேண்டும். இன்னும் இன்றைய மனிதனின் அதீத இன்ப நுகர்விற்கான (Don Juan) மனநிலைகளும் அவனது வாழ்வின் இலக்குகளைத் தடுமாறச் செய்துள்ளது. இதனால் கடவுளோடு தொடர்பின்றி இவ்வுலகத்தில் இன்பமாக, மகிழ்ச்சியாக வாழ்வது பற்றிய கவலைகளில் மூழ்கிவிடுவதால் இறைவன் அளித்த வாழ்வு எனும் கொடையை நிறைவாக்குவதை விடுத்து சுய இன்பத் தேடல்களில் ஈடுபட்டுத் தன்னையே அழித்துக் கொள்ளும் செயல்களில் ஈடுபடுகின்றான் என்பதே உண்மையாகும். இதுவே இன்று நாம் எமது சமூகத்தில் காணும் கலாசார சீரழிவுகளாகும். மனித வாழ்வின் நோக்கத்தை இலக்கை மறந்து செயல்படுவதினால் ஏராளமான சவால்களை, துன்பங்களை, அழிவுகளை இன்று சந்திக்க வேண்டியுள்ளது. எந்த வழிகளிலாவது இன்பமாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையே இன்று அதீதமாக காணப்படுகின்றது. ஆன்மீகமும் இதற்கு உதவவேண்டும் என்று தான் மனிதன் எதிர்பார்க்கின்றான். இதனால் மனித மதிப்பீடுகளின் வீழ்ச்சியினால் ஒரு காட்டுச் சுதந்திர (wild freedom) வாழ்க்கை முறைக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

### வாழ்வின் நோக்கம் பற்றிய தெளிவு வேண்டும்

இன்றைய மனிதனுக்கு வாழ்வின் இலக்கு என்ன? இறுதி நிலைப்பாடு என்ன என்பது பற்றிய தெளிவின்மையால் எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம் என்ற மனநிலையில் செயற்படுவதாகத் தெரிகின்றது. அண்மைக காலத்தில் நமது சமூகத்தில் அரங்கேறும் கொலைகள், வாள்வெட்டுக்கள், குழுமோதல்கள் மனிதனின் நெறிபிறழ்ந்த மனநிலையை பறைசாற்றுவதாக அமைகின்றது; தன்னுடைய இருப்பின் நோக்கத்தை மனிதன் மறந்துவிட்டது போல் தெரிகின்றது. தொடக்க நூலின் பின்புலத்தில் மனிதனின் இருப்பின் நோக்கம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கடவுளின் சாயலில் உன்னதமான, உயரிய படைப்பாகவே, அவரது கரத்தினாலேயே மனிதன் உருவாக்கப்பட்டான். கடவுளுக்கே உரித்தான சில பண்புகளை தன்னகத்தே கொண்டவனாகவே படைக்கப்பட்டான். மனிதனின் இன்றைய சிந்தனைகள், எண்ணங்கள் தாழ்நிலைக்குச் சென்றுவிட்டது என்றே கூறலாம். முதல் பாவத்தின் தொடர் விளைவாக சகோதரக் கொலை நிகழ்ந்தது போல் இன்றும் அது தொடர்கின்றது என்பதே உண்மையாகும். படைத்த கடவுள் எல்லாம் நல்லதெனக் கண்டார். படைப்புக்களை ஆளுகைக்கு உட்படுத்தி வாழும் ஆற்றலையும், அதிகாரத்தையும் அளித்தே படைப்பின் பங்காளியாக்கப்பட்டான் என்றே தொடக்கநூல் மனிதனின் மாண்பை வெளிப்படுத்துகிறது. இன்றைய மனிதன் படைப்புக்களுக்கே அடிமையாகி, படைத்தவரை மறந்து வாழும் நிலைக்கு தள்ளபட்டுள்ளான். இதன் விளைவாக தனது மாண்பையும், படைப்பின் நோக்கத்தையும் இழந்து வாழ்வது போல் தெரிகின்றது. கடவுளை அறிந்து, அன்பு செய்து, அவரை அடைவதைவிட வேறு எந்த நோக்கமும் இருக்க முடியாது என்பதே தெளிவான உண்மையாகும், மனிதன் தானே தன் மாண்பைக் காயப்படுத்துமளவிற்கு சென்று விட்டான் என்பதை அவனது செயல்கள் பிரதிபலிக்கின்றன. போரின் விளைவாக எத்தனையோவற்றை இழந்தாலும் இன்று தன் ஆன்மாவையே அழித்துக் கொள்ளுமளவிற்குச் செல்லும் சமூகவிரோதச் செயல்களும் ஒழுக்கக் கேடான வாழ்வும் கவலைக்குரியதே. இதுவே இன்று நாம் கிறிஸ்தவ வாழ்வில் எதிர்கொள்ளும் பாரிய சவாலாகும். பகுத்தறிவு மயக்கமும், மனச்சான்றின் மழுங்கடிக்கப்பட்ட நிலையும் இன்றைய அவல நிலையை தோற்றுவித்துள்ளது எனலாம்.

### ஆன்மீகம் செல்வரித்துப்போன செல்லாக்காசாகிவிட்டதா!

இன்று எமது பகுதிகளில் ஆலயங்களுக்கோ, கோவில்களுக்கோ, திருவிழாக்களுக்கோ பஞ்சமில்லை என்றே கூறலாம். இன்றும் எம் மத்தியில் வறுமையினால் வாடுவோர் பலர். எத்தனையோ தேவைகளோடு வாழ்வின் முகவரியிழந்து. இருப்பைத் தொலைத்துவிட்டு வாழுகின்றனர். ஆலயத் திருவிழாக்களுக்கும், ஆலயங்கள் கட்டுவதற்கும் ஏராளமான பணம் செலவிடப்படுகின்றது. ஆனால் எத்தனையோ மக்கள் ஆலயச் சூழலிலேயே வறுமையின் கோரத்தினால் வாழமுடியாது தவிப்பதையும் காணுகின்றோம். இவர்கள் மட்டில் எமது நிலைப்பாடு என்ன? சிலர் ஆலயங்களுக்கு பணம் வாரி கொடுப்பார்கள். ஆனால் அடுத்திருப்பவருடைய தேவைகள் மட்டில் கரிசனை இல்லாமல் இருப்பார்கள் ஆண்டவனையும், அடுத்திருப்பரையும் அன்பு செய்து வாழ்வதுதான் உண்மையான ஆன்மீகம் என்பதை உணராதவர்கள் போல் பாசாங்கு செய்து வாழ்கின்றனர். விளம்பரங்களுக்காக ஆலயங்களுக்கு உதவி செய்பவர்களும் உண்டு. ஆலயங்களின் வழிபாடுகள், பக்தி முயற்சிகள் எல்லாம் இருந்தும், ஏன் மக்கள் இன்னும் அன்பில்லாமல், ஒற்றுமையில்லாமல், பகிர்வில்லாமல் வாழ்கின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய காலத்திற்கு வந்துவிட்டோம். வழிபாடுகள், பக்தி முயற்சிகள், ஆலயம் சார்ந்த பணிகள் எல்லாம் மனித இதயங்களை, வாழ்வைத் தொடாதவையாக இருக்கின்றனவா என்பதையும் சிந்தித்துப் பார்ப்பது காலத்தின் தேவையாகும். இறைப்பற்று இதயத்தை ஊடறுத்துச் செல்லாதவரை வாழ்வில் மாற்றம் ஏற்பட முடியாது. எங்கோ, ஏதோ தவறு நடந்து கொண்டிருக்கின்றது என்பதே உண்மையாகும். இன்று ஆலயங்களில் ஆண்டவன் பெயரால் நடாத்தப்படும் அனைத்து திருப்பணிகளையும் மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்குச் சென்றுள்ளோம். மனிதனுடைய சமூக வாழ்விலே, ஒழுக்க வாழ்விலோ ஆலயம் சார்ந்த ஆன்மீகம் செல்வாக்குச் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆண்டவனையும், உலகத்தையும் சமாளித்து விடலாம் என்றுதான் ஆன்மீகப் பயணம் தொடர்கின்றது சிந்திப்போம். மனம் மாற முயற்சிப்போம்.

உரசல் தொடரும்....

# வாழ்வதற்குப் பொருள் வேண்டும் தான் ஆனாலும் வாழ்வதிலும் பொருள் வேண்டாமா?

விஞ்ஞானம் விரல் நுனியில் விரிந்து விட்டது. அதன் விந்தைகள் எங்கும் வியாபித்து விட்டன. அதன் போக்கில் காலச் சக்கரம் கனதியாய்ச் சுழரும் தருணத்தில் ஆங்காங்கே பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்கள் பண்பாட்டு ரீதியாகப் பல நலிவுகளை ஏற்படுத்தி விட்டன. இத்தளத்தில் நின்று கொண்டுதான் நாம் ஒழுக்கக் கடப்பாடுகளை அலச வேண்டிய தருணத்தில் உள்ளோம்.

நிலத்தை உழுது பண்படுத்தி விளைவதற்கு உரியதாகச் செய்யும் தொழிலை "Agriculture" என்று கூறுவர். Agri என்ற சொல்லிற்கு நிலம் என்பது பொருள் மனிதனின் ஐம்புலன்களையும் மனத்தையும், சீலம், நெறி, ஒழுக்கம் முதலிய உயர்பண்புகளால் உழுது பண்படுத்தி நல்வாழ்க்கைக்கு உரியதாகச் செய்யும் முயற்சிக்குப் பண்பாடு என்று அறிஞர் சோ. ந. கந்தசாமி அவர்கள் வரையறுக்கின்றார்.

சமுதாயத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் மனிதரால் ஈட்டப்பெறும் அறிவு, நம்பிக்கை, கலை, நீதிகள், விதிமுறை, வழக்கம் என்பனவும் ஏனைய ஆற்றல்களும் பழக்கங்களும் ஆகிய ஒட்டுமொத்தமான முழுமையினைப் பண்பாடு சுட்டுகின்றது. பண்பாடு என்பது கல்வியறிவோடு பொருந்திய எல்லா ஒழுங்கு முறை, நடத்தை முறை, வகைகளையும் உள்ளடக்கியதாகும்.

போக்குவரத்து வசதிகள் ஏற்படாத காலத்தில் நாம் மாட்டுவண்டிகளில் பயணம் செய்தோம். இதனால் குறித்த இலக்கை அதிக நேரம் செலவு செய்த பின்னரே அடைந்து கொண்டோம். ஆனால் இன்று போக்குவரத்துத் துறையில் அதீத வளர்ச்சி காரணமாக குறித்த இடத்தை குறித்த சில மணிகளில் சென்றடைந்து விடுகின்றோம். சில சமூகத்திற்கென்று பண்பாட்டு அம்சங்கள் உள்ளன. அந்தப் பண்பாட்டு அம்சங்கள் காலகதியிலே சிதைந்து போவதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. உதாரணமாக மாலுசந்தியில் இருந்த தெருமூடி மடம் வீதி அகலிப்புப் பணி காரணமாகச் சிதைக்கப் பெற்றுவிட்டது. ஆனால் பருத்தித்துறையில் இருக்கின்ற தெரு மூடி மடம் வீதி அகலிப்புக்காக அழிக்க முற்பட்ட போதும் மக்கள் ஒன்றுகூடி அதனை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொண்டனர். இதனால்தான் பருத்தித்துறை என்றதும் பாரம்பரிய பண்பாட்டு அம்சமாக தெருமூடி மடம் நினைவில் சுழல்கின்றது.

இன்று அவசர உலகில் மனிதன் அவசரமாகத்தான் பயணிக்கின்றான். உதாரணமாக இன்று ஒரு நபர் வீடு தேடி வந்தால் நண்பா குளிர்சாதனப் பெட்டிக்குள் சோடா இருக்குது எடுத்துக் குடிச்சிட்டு போடா எனக்கு நேரம் ஆகிவிட்டது. நான் போட்டு வாறன் என்று போய்வருகின்றார்கள். ஆனால் எமது ஆரம்ப காலப் பண்பாட்டில் ஒரு விருந்தாளி வீட்டுக்கு வந்தால் அவரை நன்றாக விருந்தோம்பல் செய்து வழியனுப்பி விடுவோம். இப்பண்பாடுகள் இன்று மாற்றலாகிச் செய்கிறது வேதனையே.

இன்றுள்ள நிலைமையில் ஆடைகளின் பெருக்கம் அதிகரித்த போதும் பெண்களின் ஆடைகளில் வெட்டு இருப்பது ஒரு பாசனாக வந்துவிட்டது. ஆண்களின் ஆடைகளில் கத்திரிக்கோல்களுக்குக் கிடைத்த சுதந்திரம் யாருக்கும் இல்லை என்ற வகையில் கத்தரிக்கோலின் தலையீடு உள்ளது. பண்பாடு ரீதியாக எதையும் செய்யலாம். ஆனால் ஒழுக்கத்திற்கு உட்பட்டு அதனைச் செய்தல் வேண்டும். ஒரு செயற்பாட்டில் நன்மையும் இருக்கிறது. தீமையும் இருக்கிறது. நன்மையைத் தெரிந்து கொண்டால் அதன் தீமையை உணர முடியும். அறவே நன்மை - தீமை இரண்டையும் தெரியாமல் விட்டால் மனித முன்னேற்றத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்படும்.

வாழ்வதற்குப் பொருள் வேண்டும் தான் ஆனாலும் வாழ்வதிலும் பொருள் வேண்டாமா? என்று எமக்குள் புடமிட்டுப் பார்க்க வேண்டியவர்களாகவுள்ளோம். முன்னர் ஒரு வயது முதிர்ந்த அல்லது எம்மிலும் வயது கூடிய நபரைக் கண்டால் ஒரு பணிவாகப் பேசுகின்ற நடைமுறை இன்று அருகிக்கொண்டே போகின்றது.

மனிதன் எல்லாத் தீங்குகளையும் செய்ய முற்படுகின்ற போது சட்டம், ஒழுக்கம், மனச்சாட்சி என்பனவற்றிற்குப் பயப்படுகின்றான். இதன் பிரகாரம் தான் எடுத்துக் கொண்ட தீமையான விடயத்தைக் கைவிடுகின்றான். மாற்றங்கள் வாழ்வில் வர வேண்டும் தான் அவை மனமாற்றத்தோடு வந்தால் ஆரோக்கியமாகவிருக்கும்.

உலகத்தில் எத்தனையோ கோடி மாந்தர்கள் தோன்றி மறைந்துவிட்டார்கள். ஆனால் இன்றும் ஒரு சிலரையே உலகம் நினைவில் வைத்திருக்கின்றது. உதாரணமாக விவேகானந்தர், அன்னை திரேசா, நெல்சன் மண்டேலா, ஆபிரகாம் லிங்கன், காந்தி என்போர் மறைந்து பல ஆண்டுகள் ஆனாலும் அவர்கள் எம் உலகிலும் உள்ளத்திலும் மறைந்து விடவில்லை. காரணம் அவர்கள் வாழ்ந்த ஒழுக்க மேம்பாடே காரணமாகும்.

சினிமாத்துறையின் வருகையினால் எத்தனை மனிதர்கள் கதாநாயகன், கதாநாயகியின் கோலம் பூண்டு திரிகின்றார்கள். அவர்கள் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு தம்மையும் ஒரு நாயகர்களாக காட்டிக் கொண்டு வீரதீரச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். யதார்த்தச் சூழலில் இம்மியளவும் இக்கோலம் பொருத்தமற்றது என்பதை விளங்கிக் கொள்ள மறுத்துவிடுகின்றார்கள்.

கட்டிய கணவன் கண்திறந்து பார்த்துக் கொண்டிருக்க சில ஆண்கள் கூடியிருந்த சபையிலே துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலினை உரித்த போது அவள் தலையை விரித்தபடி கோவிந்தா! கோபாலா என்று கூக்குரலிட்டு அழுதபோது கோடி கோடியாகத் துகில் வளர்ந்து கொண்டேயிருந்தமையால் உரிந்த துச்சாதனன் களைத்து மயங்கி வீழ்ந்தான்.

கண்ணகி தனது கணவன் கோவலன் கொலையுண்ட போது தலைவிரி கோலத்துடன் பாண்டிய நாட்டு மன்னர் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டாள். சீதை இராவணனிடம் மாட்டிக் கொண்ட போது படைத்தவனை நோக்கித் தலையை விரித்தபடி இறைவா இரங்கும் என்று வேண்டியுள்ளாள். சந்திரமதி தன் மகன் லோகிதாசனைத் தகனம் செய்ய முற்பட்டபோது தன் கணவன் அரிச்சந்திரனால் மகன் வீசப்பட்டபோது கண்ணீரோடு தலையை விரித்தபடி என் மகனைத் தகனம் செய்ய நான் எங்கே போவேன் ஏது செய்வேன், என்று புலம்பினாள், மேலே குறிப்பிட்ட நான்கு பெண்மணிகளும் தமது நீதிக்காகவும் அவலம் இழைக்கப்படும் போதும் அவற்றிற்குத் தீர்வு காணும் பொருட்டுத் தமக்காக இரககத்தைப் பெறவுமே தலை விரி கோலம் பூண்டனர். இன்றுள்ள எம் சமூகத்தில் இளம் பெண் தலைமுறையினர் தலைமயிரை விரித்துத் திரிவது ஒரு பாஷனாகக் கொண்டு நடமாடுகின்றார்கள். அவலத்திற்கு விரிக்கப்பட்ட கூந்தலை அவலட்சணமாக நினைக்கின்றார்கள். நீதிக்காக குலைக்கப்பட்ட கூந்தலை நித்தம் தமக்கு அழகுக் கலையாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இத்தருணத்தில் தான் பண்பாட்டின் ஆணிவேர் ஆட்டம் கண்டு போய் விடுகிறது.

08ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமதிபுரப் பங்கை அமலமரித்தியாகிகளின் உயர் தலைவர் பேரருட்திரு லூயிஸ் லூகன் அ.ம.தி அவர்கள் தரிசித்தார்



இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அமலமரித்தியாகிகளின் உயர்தலைவர் பேரருட்திரு லூயிஸ் லூகன் அ.ம.தி அவர்கள், வடமாநில அமல மரித்தியாகிகளின் வழிநடத்தலிலே உள்ள பங்கான அமதிபுரப் பங்கை கடந்த 17.06.2014 அன்று தரிசித்தார். சபை முதல்வருக்கான வரவேற்பு ஸ்கந்தபுரம் தூய அந்தோனியார் ஆலய முன்றலிலே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு மாலை 5.30 மணியளவில் ஆரம்பமாகியது. முதலிலே தூய அந்தோனியார் ஆலயத்தின் முன்றலிலே புதிதாக அமைக்கப்பட்ட ஐந்து அரை அடியுள்ள பெரிய சுருபத்தை சபைத் தலைவர் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். பின்னர் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. உதவிப்பங்குத்தந்தை அருட்பணி ஜெறால்ட் அ.ம.தி அவர்களினால் சபை முதல்வருக்கு அமதிபுரப் பங்கின் வரலாறும், தற்போதைய நிலையும் சுருக்கமாகக் கூறப்பட்டது. சபை முதல்வர் தனது உரையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த வன்னி மக்களோடு தான் சபையின் பாதுகாவலி தூய கன்னி மரியாளிடம் வேண்டுதல் செய்திருந்ததாகவும், சிறப்பாக கணவர்களை இழந்துள்ள இளம் தாய்மாருக்குத் தான் இறைவனிடம் தொடர்ந்து மன்றாடுவதாகவும் கூறினார். இந்த நிகழ்விற்கு அருட்தந்தையர்களான ஸ்ரனி சுவாம்பிள்ளை அ.ம.தி அல்பொன் சேகர் அ.ம.தி இம்மானுவேல் அ.ம.தி மற்றும் அருட்சகோதரி லூட்ஸ் தி.கு ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தார்கள். இந்த வரலாற்று நிகழ்விற்கு, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், கோட்டைகட்டியகுளம், மணியன்குளம், ஆரோக்கியபுரம், அமதிபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் இருந்து கத்தோலிக்க மக்கள், மற்றும் இந்து மறையைச் சார்ந்த பல மக்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் சிறப்பு அம்சமாக, சபைமுதல்வர் அவர்கள், அமலமரித்தியாகிகளின் சபை நிறுவுனர் தூய இயூஜின் டி மசெனெட்டார் அணிந்த திருச்சிலுவையினால் ஆசீர்வழங்கி, நிகழ்விற்கு வந்திருந்த எல்லா மக்களையும் தனது கரங்களினால் தொட்டு ஆசீர்வதித்தார். இரவுணவைத் தொடர்ந்து அமதிப்புரப் பங்கிற்கான அமதிகளின் உயர்தலைவரது விஜயம் நிறைவிற்கு வந்தது.

## ஸ்கந்தபுரத்தில் புனித அந்தோனியாரின் சிலை திறந்து வைக்கப்பட்டது



ஸ்கந்தபுரப் பதியின் பாதுகாவலராம் புனித அந்தோனியாரின் சிலை கடந்த யூன் 17ம் திகதி அன்று அமலமரித் தியாகிகளின் உயர் தலைவர் பேரருட்திரு. லூயிஸ் லூகன் அ.ம.தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச் சிலைக்குரிய கட்டடத்திற்கான அடிக்கல்லை அருட்தந்தை இம்மானுவேல் அ.ம.தி அடிகள் நாட்டிவைத்தார். தொடர்ந்தும் இக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு அமதிபுர பங்கின் உதவிப்பங்குத் தந்தையான அருட்தந்தை ஜெறால்ட் அடிகளின் ஆலோசனை வழநடத்துதலின் கீழ் ஸ்கந்தபுரம் வாழ் கத்தோலிக்க மற்றும் பிறமத சகோதரர்களின் ஒத்துழைப்பிலும், அர்ப்பணிப்பிலும், விடாமுயற்சியிலும் இக்கட்டட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



அண்மையில் இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு யாழ் மறைமாவட்டத்திற்கு வருகை தந்த அமல மரித்தியாகிகளின் உலகத் தலைவரான அருட்பணி லூயிஸ் லூகன் கடந்த 19.06.2014 அன்று கோப்பாய் தூய மரியன்னை ஆலயத்தையும் தரிசித்த போது கோப்பாய் திருநெல்வேலிப் பங்குத்தந்தை அருட்பணி ஞா. வென்சஸ்லோஸ் அ.ம.தி வரவேற்பதையும் பங்கு மக்களுடன் இணைந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## புல்லாங்குழல்!... 3ம் பக்கத் தொடர்ச்சி

வாசலில் பல விதமான சிறப்புகள் கொண்ட புல்லாங்குழல் ஒன்றை விலை கொடுத்து வாங்கினான். இளைஞன் விலை கொடுத்து வாங்குவதைக் கண்டவர்கள் 'இதைப்போய் இவ்வளவு விலை கொடுத்து வாங்குகிறானே?' என்று வியப்போடு பார்த்ததைக் கண்டு, "நான் நாளைக் காலை இந்தப் புல்லாங்குழலை அரண்மனை மண்டபத்தில் வாசிக்கப் போகிறேன், இதிலிருந்து அபூர்வமான ராகங்கள் துள்ளி வரப்போகின்றன" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான். அவன் கூறியதுபோல அடுத்த நாள் அரண்மனையில் கூட்டம் கூடியது. என்ன ராகம் வாசிக்கப் போகிறானோ என்று எல்லாரும் கேட்க ஆவலாய் இருந்தார்கள். அவன் புல்லாங்குழலை கையில் எடுத்து இதழோடு சேர்த்து இராகங்களை வாசிக்க இசை வழிந்தோடி, இதயங்களை நனைத்ததால் எல்லாரும் பரவசமடைய, இளைஞன் மனந் திறந்து பேசினான். "நான் நிறையப் படித்தி ருக்கிறேன். புதிய ராகத்தைப் போல் எந்தப் பணியையும் புதுமையாக என்னால் செய்ய முடியும். எனக்கொரு வாய்ப்புத் தாருங்கள்" என்றான்.

ஒரு பணக்காரர் அவனை அழைத்துச் சென்று பணியில் அமர்த்தினார். இளைஞனின் வாழ்வு ஏற்றம் அடைந்தது. அந்தப் புல்லாங்குழல் இளைஞனின் வாழ்க்கையைப் பூபாளமாக மாற்றியது. இப்படித்தான் நம் ஒவ்வொருவருக்குள்ளும் படைப்புத்திறன் உறங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இளைஞனைப் போல நாமும் நமது திறன்களை வெளிப்படுத்துவோம். நமது வாழ்க்கையிலும் புதிய உதயம் பிறக்கும். புதிய உதயமாய் பூபாளம் காணும் புல்லாங்குழலைப் போற்றுவோம். புதிய பூபாளத்தை வரவேற்போம். நம் வாழ்வும் ஒரு புல்லாங்குழலாய் மாறும்.நமது வாழ்வின் வளம் கூடும்!

## காவலூர் தூய அந்தோனியார் திருவிழா



காவலூர் புனித அந்தோனியார் திரு விழா கடந்த ஆனி 13ம் திகதி நடைபெற்றது. ஊர்காவற்றுறை பங்குமக்களும், கொழும்பு வாழ் காவலூர் மக்களும் இணைந்து இத் திருவிழாவை பங்குத்தந்தை அருட்பணி. C.G.ஜெயக்குமார் அடிகளாருடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

## வாழ்வதற்குப் பொருள்... 7ம் பக்கத் தொடர்ச்சி

கடலளவு செல்வம் இருந்தாலும் கையளவு தான் இதயம் என்பதை சில சமயங்களில் மறந்து விடுகின்றோம். எத்தனை ஆயிரம் பணத்தைச் சம்பாதித்தாலும் மனதில் நிம்மதி இல்லையென்றால் அந்தப் பணம் இருந்து என்னதான் பிரயோசனம். வயதிற்கு ஏற்ற செயற்பாடுகள் குறைந்து வயது குறைந்தவர்கள் உள்ளிட்ட பலர் மதுபோதைக்கு அடிமையாகி ஆடம்பரத்தில் ஆனந்தம் காண்கின்றனர். எந்த நிலையில் இருந்தாலும் ஒழுக்கக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டும். சந்தர்ப்பம் கிடைகின்றது. என்பதற்காக நாம் சறுக்கி வாழ முடியாதுதானே, சந்தர்ப்பங்களை சரித்திரமாக்கலாம் ஆனால் தரித்திரமாக்கலாமா?

இன்று எல்லோர் வீடுகளிலும் சின்னத் திரை ஆக்கிரமித்திருக்கிறது. இதனால் கணிசமான பெண்கள் மயங்கி விட்டார்கள். தங்கமான புருஷன் நாடகம் பார்ப்பார்கள் ஆனால் வீட்டில் புருஷனை சற்றேனும் அன்பாகக் கவனிக்க மாட்டார்கள். இங்கு எங்கே எங்கள் பண்பாட்டுக் கோலம் போய் விட்டது.

தொலைபேசிகளின் பாவனை கணிசமான அளவில் வியாபித்திருக்கிறது. இதனால் நாகரீகமற்ற சொல்லாடல்கள் தோற்றம் பெற்று மனிதப் பண்பாட்டை நலிவடையச் செய்து விடுகின்றது. தொலைபேசிகளின் தீவிர உரையாடல்களினால் ஒழுக்கத்தில் விழுக்காடு அடைகின்றான். இந்த நிலையில் தனக்கென ஒரு வரம்பு போட்டு மனிதன் பயணிக்க வேண்டும். இவ்வாறு பயணித்தால் மாற்றமுறுகின்ற பண்பாட்டில் மனித ஒழுக்கக் கட்டுப்பாடு மதிக்கப்படும் போற்றப்படும், என்பதில் ஐயமில்லை.

**செ. கஜன்நாத்**
**4 ஆம் வருடம், மெய்யியற்றுறை**
**யாழ் பல்கலைக்கழகம்.**

## வாசல் கோலம்!... 5ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறதே! அதற்கு இணையாக வேறு எதைச் சொல்ல முடியும்? இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் மனம்தான். வாசலெங்கும் அரிசி மாவால் கோலங்களைப் போடுகிறோம். அழிந்து போகும் என்பது நமக்குத் தெரிந்ததுதான். தெரிந்திருந்தாலும் அதைத் திட்டமிட்டு, அழகுற ஒருகட்டுப்பாட்டுக்குள் போடுகிறோம். மனதில் ஒரு தெளிவான திட்டம் தீட்டி, அதற்கேற்றாற்போல் புள்ளிகளைக் கோலத்துக்குத்தக்கப்படி கோடுகளால் இணைக்கிறோம். புள்ளிகளை நேராக வைப்பதிலும், அறுபடாத இழைகளாகக் கோலமாவை இழுப்பதிலும், ஓர் அலாதியான ஆனந்தம் இருக்கிறது. மாவுதானே என்று அள்ளித் தெளித்துவிடமாட்டோம்.

நமது வாழ்வு நிலையில்லாமல் அழியக்கூடியது என்பதற்காக எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று வாழ்வது வாழ்வாகாது கணக்கிட்டுப் புள்ளி வைத்து கோடுகளால் இணைத்துக் கோலம் போடுவதுபோல வாழ்வையும் திட்டமிட்டு அடித்தளம் அமைத்து வாழவேண்டும் என்று கோலம் நமக்கு அறிவு புகட்டுகிறது. கோலங்களைப் போல நாமும் நமது வாழ்வில் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டுத் தொடங்க வேண்டும் என்பதை அதிகாலைக் கோலம் நமக்கு நினைவூட்டுகிறது. பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற ஒரு பண்பாட்டுப் பாடத்தையும் வாசல் கோலம் கற்றுத் தருகின்றது. அரிச மாவை தடம் புரளாத ரெயில் பெட்டிகளாய் செல்வது போல எறும்புகள் அவற்றை உணவாக எடுத்துச் செல்லும். அது போல நம்முடைய வாழ்வையும் பிறருக்காகப் பயன்படும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதை மாவுக்கோலங்கள் எடுத்துச் சொல்கின்றன. காலத்தின் கோலம் அரிசி மாவுக்குப் பதிலாக இன்று கல்மாவுக் கோலமிடுகிறோம்.

கோலத்தைப் புள்ளிகள், கோடுகள், தொடர்புகளை உண்டாக்கி, பிரச்சனைகளைச் சரியாகத் தீர்க்க உதவுகின்றன. நாமும் நமது வாழ்வில் புத்தியைக் கூர்மைப்படுத்தி, கற்பனைத் திறனையும், ஆர்வத்தையும் வளர்ப்பது, ஆர்வம் ஆற்றலையும், வெற்றியையும் பெற்றுத் தருகிறது.

பூமிதான இயக்கத்தை வினோபா தோற்றுவித்தார். இவரை ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று சில மாணவர்கள் சந்தித்தபோது அவரே முன்வந்து "நான் சொல்வதை நீங்கள் செய்து தருவீர்களா?" என்று கேட்க :சொல்லுங்கள், செய்கிறோம்" என்கிறார்கள் மாணவர்கள். உடனே அவர் சின்னச் சின்ன புள்ளிகளாய் கிழிந்துக கிடந்த தேசப்படத்தைக் கொடுத்து "இதைச் சரி செய்து கொடுங்கள்" என்றார். அதை வாங்கி எப்படி எப்படியோ வைத்துச் சரி செய்து பார்த்தார்கள். வரைபடம் சரியாகவரவில்லை. கூர்மையாகப் படத்தைப் பார்த்த ஒரு மாணவர், "கொடுங்கள்... நான் சரி செய்து தருகிறேன்" என்று அனைத்தையும் வாங்கினான். கிழிந்து போயிருந்த தேசப்படத்தை சிறிது நேரத்திலேயே சரி செய்து கொடுத்தான். பார்த்துக் கொண்டிருந்த அவர்களது விழிகள் வியப்பால் விரிந்தன. "இவ்வளவு விரைவாக எப்படிச் சரிசெய்தாய்?" என்று வியப்போடு கேட்க, "நான் புள்ளிகளாய் கிடந்த வரைபடத்தை உற்றுக் கவனித்தேன். பின்புறத்தில் ஒரு மனித உருவம் இருப்பது தெரிந்தது. மனிதனைச் சரிப்படுத்தினேன். திரும்பிப்பார்த்தேன். தேசப்படம் சரியாகி விட்டது." நமது தேசம் சரியாக இருக்க வேண்டுமானால் முதலில் தனி மனிதன் சரியாக இருக்க வேண்டும் என்பதே இந்தக் கதையின் மூலம் அறிந்த உண்மை. புள்ளிகளைச் சரியாக இணைத்து மனிதனைச் செதுக்கியதுபோல புள்ளிகளாய்க் கிடக்கும் நமது மனங்களையும் மனி தம் நிறைந்தவர்களாய் இணைந்து வாழச் சொல்கிறது. வாழ்வதை மட்டுமல்ல, வாழவும் சொல்கிறது வாசல் கோலம், மனித மனங்களை இணைப் போம். நமது வாழ்வின் வளம் கூடும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2014ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org